## அன்பின் சகோதரருக்கு

பிறந்தநாள் வாழ்த்துக்கள்



**ஜான் எஸ் நாதன்**

சுவிசேஷகர்

சகோ. ஜான் எஸ் நாதன் அவர்கள் திருவள்ளுர் மாவட்டம் மீஞ்சூர் பகுதியில் கர்த்தருடைய ஊழியத்தை செய்து வருகிறார். அவர் பல ஆண்டுகளாக நமது மாத இதழில் தொடர் கட்டுரைகளையும் எழுதியுள்ளார். கர்த்தருடைய சபையைப் பற்றியும் ஊழிய சம்பந்தமாக அநேக காரியங்களைக் குறித்தும் அறிய விரும்பினால் அவரோடு தொடர்பு கொள்ளுங்கள். ஒரு சிறப்பான ஆலோசனையைப் பெற்றுக்கொள்ளலாம்.

மொபைல் எண்: 9444443378

-ஆசிரியர்

"ஆரோனைப்போலத் தேவனால் அழைக்கப்பட்டாலொழிய, ஒருவனும் இந்தக் கனமான ஊழியத்துக்குத் தானாய் ஏற்படுகிறதில்லை"
எபிரெயர் 5:4

*Our Radio Program:* Sri Lanka Radio SW 31 Meter Every Saturday 5.30P.M
&
Our TV Program: Nambikkai TV Every Monday & Saturday 7.30 P.M

R.N.I.No.TNTAM/2000/3629 Postal Registration No.DDL/19/2015-2017
Licensed to Post Under W.P.P. No. TN/WPP-169/SR/2015-2017
Posted at Batlagundu Post office on 10th May 2017

*Cell : 94435 58041*
*Phone : 04543 263 278*
*E-Mail arjunanglory@gmail.com*

**To**

Postman Remarks (If Undelivered):

- Refused
- No such person
- Address insufficient
- Left without instructions
- Deceased

*Our Postal Address:*
THE WORD OF CHRIST
POST OFFICE BOX No. 5
BATLAGUNDU - 624202
S.INDIA

Owned and published by B.Arjunan
from 17.2.102 D/5 Rajan Nagar, Batlagundu -624 202
and printed by R.Sathiyamoorthy at Bharathi press,
14/13/24 Melamanthai Street,Batlagundu - 624 202.
Editor and Publisher B.Arjunan



தனிப்பிரதி ரூ.5/-
ஆண்டு சந்தா ரூ.50/-

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்

மரம் 17 | மே 2017 | கனி 6

For I am not ashamed of
the gospel of Christ - Ramans 1:16



## கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் குறித்து நான் வெட்கப்படேன் – ரோமர் 1:16

THE WORD OF CHRIST

கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே
சகல ஞானத்தோடும் பரிபூரணமாக
வாசமாயிருப்பதாக – கொலோசெயர் 3:16



ஆசிரியர்
B. அர்ஜுனன்

## World Evangelism Gospel Media

**Arjunan in Tamil on Nambikkai TV & Radio:**
TV:On Monday & Saturday 7.30-7.45 p.m
Radio:Every Saturday 5.30-5.45 pm on 31 meter band of Sri Lanka Radio. *(TAMILNADU Contact Mobile: 9443558041)*

**Sunny, Francis & Vinay David in Hindi onTV:**
Every Sunday and Tuesday 7.00-7.30 p.m on shubhSandesh Hind Channel.
*(NEW DELHI Contact Mobile: 09810896789)*

**P.K.Varghese in Malayalam on TV:**
Every Saturday 6.00-6.30 a.m on Jai Hind Channel.
*(KERALA Contact Mobile: 9447035465)*

**Philemon & Kingsley in Tamil on Tamilan TV and Nambikkai TV:**
Every Sunday 6.45-7.00 a.m and Every Friday 6.00-6.30 a.m.
*(TAMILNADU Contact Mobile: 9244214421)*

**Rajanayagam in Tamil on Tamilan TV:**
Every Monday 7.00-7.15 a.m and Thursday 9.30-10.00 p.m and Saturday 7.15-7.30 a.m.
*(TAMILNADU Contact Mobile: 98427 30382)*

**P.R.Swamy & Douglas in Tamil on Radio:**
Every Sunday to Wednesday at 5.30- 5.45 p.m on 31 meter band of Sri Lanka Radio. *(KARNADAKA Contact Mobile:09844 70763)*

**Joshua & Ricky Gootam in Telugu on Subhavartha, Rakshana TV:**
Every Sunday 6.00 p.m Every Wednesday 6.30 p.m Every Thursday 11.00 a.m Satyavani TV Online:www.Sakthitv.in Every Wednesday & Friday 8.00 p.m. Every day at 7.30 and 3.30 .m. on Kanthi TV in A.P Only.
*(ANDRAPRADESH Contact Phone: 08842363722)*

## தி வேர்ட் ஆப் கிரைஸ்ட் ஊழியங்கள்


17 வது வாசகர்
கருத்தரங்கு
நாமக்கல் மாவட்டம்


18 வது வாசகர்
கருத்தரங்கு
திருப்பூர் மாவட்டம்


18 வது வாசகர்
கருத்தரங்கு
திருப்பூர் மாவட்டம்


18 வது வாசகர்
கருத்தரங்கு
திருப்பூர் மாவட்டம்


**THE WORD OF CHRIST**
Monthly Magazine
**Editor**
**B.ARJUNAN**
**Associate Editor**
**K.R.K.Ravi Asir**


### தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்
### மாத இதழின் உள்ளே...

ஆசிரியருரை,
செய்திகள்: ஜெ.சி.சோட், பெட்டி சோட்,
ஜெர்ரிபேட்ஸ் மற்றும்
வேதபாடம், வாலிபர் பகுதி, பெண்கள் பகுதி
சிறுவர் பகுதி, வேத அறிவுப்போட்டி இன்னும் பல...

"Go ye into all the world, and preach the gospel to every creature" - Mark 16:15
"The Churches Of Christ Salute you" Romans 16:16


Published by
WORLD LITERATURE PUBLICATIONS
Post Box No.5, Batlagundu - 624 202.
SOUTH INDIA




## வேத அறிவுப் போட்டி எண்: 201

போட்டியாளர்கள் கவனத்திற்கு,
கீழ்கண்ட பத்து கேள்விகளுக்கும் வசன ஆதாரத்துடன் விடை எழுதி, தபால் மூலம் இம்மாதம் இறுதிக்குள் "தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்" முகவரிக்கு வந்து சேரும்படி உங்கள் முழு முகவரியுடன் எழுதி அனுப்பவும். விடை பின்வரும் மாத இதழில்களில் காண்க.

1. யோனா கர்த்தருடைய சமூகத்தினின்று விலகி எதற்குப்போக கப்பல் ஏறினான்?
2. நியாயப்பிரமாணம் இல்லாவிட்டால் பாவம் எப்படிப்பட்டதாயிருக்கும்?
3. சீயோனின் ஆசரியர்கள் எதற்கு உபதேசிக்கிறார்கள், அதின் தீர்க்கதரிசிகள் எதற்கு குறிசொல்லுகிறார்கள்?
4. எவர் தேவனுடைய ஆழங்களையும் ஆராய்ந்திருக்கிறார்?
5. கர்த்தர் எரிச்சலுள்ளவரும் எதைச் சரிக்கட்டுகிறவருமான தேவனாயிருக்கிறார்?
6. பழைய ஏற்பாடு வாசிக்கப்படுகையில் அந்த முக்காடு நீங்காமலிருக்கிறது; அது எவராலே நீக்கப்படுகிறது?
7. களிமண் சுமையை சுமத்திக்கொள்ளுகிறவன் யார்?
8. வேறொரு சுவிசேஷத்திற்குத் திரும்புகிறதைப்பற்றி நான் ஆச்சரியப்படுகிறேன் என்று எவர்களுக்கு பவுல் எழுதினார்?
9. சொப்பனக்காரர் வீணானதைச் சொல்லி, வியர்த்தமாகத்தேற்றரவு பண்ணினார்கள் ஆகையால் ஜனங்கள் ஆடுகளைப்போலச் சிதறி, மேய்ப்பனில்லாததினால் என்னவானார்கள்?
10. புறஜாதிகள் புத்தியில் அந்தகாரப்பட்டு, தங்கள் இருதய கடினத்தினால் தங்களில் இருக்கும் அறியாமையினாலே தேவனுடைய ஜீவனுக்கு எப்படியிருக்கிறார்கள்?

**போட்டியாளர்கள் கவனிக்க...**
ஒவ்வொரு முறையும் விடை எழுதும்போது உங்களுடைய பதிவு எண் (அதாவது Ref.No) மற்றும் மொபைல் எண் எழுதவும். நமது மாத இதழை அறிமுகம் செய்கிறவர்கள் இதழை படிக்க விருப்பமில்லாதவர்களுடைய முகவரிகளை எழுதி அனுப்பவேண்டாம். நன்றி. – ஆசிரியர்

## இம்மாதம் 'தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்' நடத்தும் வேதபாட வகுப்புகளும் சுவிசேஷ கூட்டங்களும்

19

நாள்: 3.05.2017 வியாழக்கிழமை
நேரம்: காலை 10.00 மணி
இடம்: A. மாசிலாமணி, இவ்விதழின் வாசகர்
49, மாதா கோயில் தெரு
வேலம்பி - 632 506
களவய் S.O.
வேலூர் மாவட்டம்
தொடர்புக்கு: 9943667336



## தன்னைத் தீட்டுப்படுத்தாதபடி பாதுகாத்துக்கொண்ட தானியேல்

சிறுவர் பகுதி

*வேதபகுதி: தானியேல் 1:1-21*



நேபுகாத் நேச்சார் என்ற ராஜா இஸ்ரவேல் புத்திரருக்குள்ளே ராஜகுலத் தார்களிலும் துரைமக்களிலும் யாதொரு மாசும் இல்லாதவர்களும், அழகானவர்களும், சகல ஞானத்திலும் தேறினவர்களும், அறிவில் சிறந்தவர்களும், கல்வியில் நிபுணரும், ராஜாவின் அரமனையிலே சேவிக்கத் திறமையுள்ளவர்களுமாகிய சில வாலிபரைக் கொண்டுவரவும், அவர்களுக்குக் கல்தேயரின் எழுத்தையும் பாஷையையும் கற்றுக் கொடுக்கவும் ராஜா தன் பிரதானிகளின் தலைவனாகிய அஸ்பேனாசுக்குக் கற்பித்தான். ராஜா, தான் உண்ணும் போஜனத்தி லேயும் தான் குடிக்கும் திராட்சரசத்திலேயும் தினம் ஒரு பங்கை அவர்களுக்கு நியமித்து, அவர்களை மூன்றுவருஷம் வளர்க்கவும், அதின் முடிவிலே அவர்கள் ராஜாவுக்கு முன்பாக நிற்கும்படி செய்யவும் கட்டடையிட்டான்.

அவர்களுக்குள்ளே யூதா புத்திரராகிய தானியேல், அனனியா, மீஷாவேல் அசரியா என்பவர்கள் இருந்தார்கள். இவர்களுக்கு மற்றொரு பெயர், பெல்தெஷாத்சார், சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ. தானியேல் ராஜாவின் போஜனத்தினாலும் அவர் பானம் பண்ணும் திராட்சரசத்தினாலும் தன்னைத் தீட்டுப்படுத்தலாகாதென்று, தன் இருதயத்தில் தீர்மானம் பண்ணிக்கொண்டு, தன்னைத் தீட்டுப்படுத்தாதபடி பிரதானிகளின் தலைவனிடத்தில் வேண்டிக்கொண்டான். தேவன் தானியேலுக்குப் பிரதானிகளின் தலைவனிடத்தில் தயவும் இரக்கமும் கிடைக்கும்படி செய்தார். ஆகையால் தானியேல் பிரதானிகளின் தலைவனை நோக்கி பத்துநாள்வரைக்கும் உமது அடியாரைச் சோதித்துப்பாரும்; எங்களுக்கு புசிக்க பருப்பு முதலான மரக்கறிகளையும், குடிக்கத் தண்ணீரையும் கொடுத்து, எங்கள் முகங்களையும் ராஜபோஜனத்தில் புசிக்கிற வாலிபருடைய முகங்களையும் ஒத்துப்பாரும்; பின்பு நீர் காண்கிறபடி உமது அடியாருக்குச் செய்யும் என்றான். அந்தப்படியே சோதித்துப்பார்த்தபோது இவர்களுடைய சரீரம் புஷ்டியுள்ளதாக இருந்தது. மேலும் ராஜசமூகத்தில் நிற்கும்போது ஞானத்துக்கும் புத்திக்கும் அடுத்த எந்த விஷயத்தில் ராஜா அவர்களைக் கேட்டு விசாரித்தானோ, அதிலே தன் ராஜ்யம் எங்குமுள்ள சகல சாஸ்திரிகளிலும் ஜோசியரிலும் அவர்களைப் பத்து மடங்கு சமர்த்தராகக் கண்டான்.

அன்பான தம்பி தங்கைகளே, நீங்களும் வருங்காலங்களில் இந்த நான்குபேரைப்போல உங்களை தீட்டுப்படுத்தாது பாதுகாத்துக் கொள்வீர்கள் என்றால் உங்களுக்கும் தேவன் ஞானத்தையும் புத்தியையும் தந்தருளுவார்.

**மனப்பாட வசனம்:** **“கர்த்தர் ஞானத்தை தருகிறார்; அவர் வாயினின்று அறிவும் புத்தியும் வரும்” நீதிமொழிகள் 2:6.**




# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்
## THE WORD OF CHRIST
புதிய ஏற்பாட்டு தூய கிறிஸ்தவ மாத இதழ்

மரம் - 17 மே -2017 கனி - 6


ஆசிரியருரை

## வீட்டைக் கட்டுகிறவர் யார்?
### Who Build the House?




**ம**னிதன் எதை எதையோ கட்டுகிறான். அதில் வளர்ச்சி காண்கிறான். ஆனால் அவனுடைய வீட்டைக் கட்டுவது தேவனாகிய கர்த்தர். "கர்த்தர் வீட்டைக் கட்டாராகில், அதைக் கட்டுகிறவர்களின் பிரயாசம் விருதா; கர்த்தர் நகரத்தைக் காவாராகில் காவலாளர் விழித்திருக்கிறது விருதா" என சங்.127:1-ம் வசனத்தில் படிக்கிறோம். ஆம், தேவனாகிய கர்த்தர் மனிதன் தனிமையாய் இருப்பது நல்லதல்ல என்று அவனுக்கு ஏற்றதுணையை கொடுத்து முதல் குடும்பத்தை ஏதேன் தோட்டத்தில் ஆரம்பித்துவைத்தார். அன்றுமுதல் உலகத்தில் இருக்கிற எல்லோருமே இந்த காரியத்தை மட்டும் எந்த கலாச்சாரத்தைச் சேர்ந்தவராகயிருந்தாலும், மொழிபேசுகிறவர்களாகயிருந்தாலும் தங்களுடைய பிள்ளைகளுக்கு தவறாது செய்து திருமணத்தை முடித்து வைக்கின்றனர். நம்முடைய ஆதிப்பிதாக்களாகிய லாபானும் பெத்துவேலும் இந்த காரியம் கர்த்தரால் வந்தது என்று சொன்னார்கள். ஆம், வீட்டைக்கட்டுவது கர்த்தருடைய சித்தமாயிருக்கிறது. உங்களுடைய வீடு கர்த்தரால் ஏற்படுத்தப்பட்ட குடும்பமா? அவர் உங்களுடைய வீட்டைக் கட்ட இடம் கொடுங்கள். அப்பொழுது அது ஆசீர்வாதமாக இருக்கும்.

சபையைக் கட்ட கர்த்தராகிய இயேசுவை தேவன் தெரிந்துகொண்டு; "இதோ, தெரிந்துகொள்ளப்பட்டதும் விலையேறப்பெற்றதுமாயிருக்கிற மூலைக்கல்லை சீயோனில் வைக்கிறேன்; அதின்மேல் விசுவாசமாயிருக்கிறவன் வெட்கப்படுவதில்லை என்று வேதத்தில் சொல்லியிருக்கிறது. ஆகையால் விசுவாசிக்கிற உங்களுக்கு அது விலையேறப்பெற்றது; கீழ்ப்படியாமலிருக்கிறவர்களுக்கோ வீட்டைக் கட்டுகிறவர்களால் தள்ளப்பட்ட பிரதான மூலைக்கல்லாகிய அந்தக் கல் இடறுதற்கேதுவான கல்லும் விழுதற்கேதுவான கன்மலையுமாயிற்று" என்கிறார் (1பேது.2:6,7). இந்த மூலைக்கல்லின்மேல் ஆவிக்குரிய குடும்பம் கட்டப்பட்டுவருகிறது. அப்போஸ்தலர் தீர்க்கதரிசிகள் என்பவர்கள் மேல் இசைவாய் இணைக்கப்பட்டு கட்டப்படுகிறது. இப்படியாக கர்த்தருக்குள் பரிசுத்த ஆலயமாக எழும்புகிறது. இதைக்குறித்து நீங்கள் என்றாவது சிந்தித்ததுண்டா? ஆகையால் ஆண்டவர் இயேசு தமது பிரசங்க வாக்கியத்தில் குறிப்பிடும்போது; "என்னை ஆண்டவரே! ஆண்டவரே! என்று நீங்கள் சொல்லியும், நான் சொல்லுகிறபடி நீங்கள் செய்யாமற்போகிறதென்ன?

என்னிடத்தில் வந்து, என் வார்த்தைகளைக் கேட்டு, அவைகளின்படி செய்கிறவன் யாருக்கு ஒப்பாயிருக்கிறனென்று உங்களுக்குக் காண்பிப்பேன். ஆழமாய்த் தோண்டி, கற்பாறையின்மேல் அஸ்திபாரம்போட்டு, வீடுகட்டுகிற மனுஷனுக்கு ஒப்பாயிருக்கிறான்; பெருவெள்ளம் வந்து, நீரோட்டம் அந்த வீட்டின்மேல் மோதியும், அதை அசைக்கக்கூடாமற்போயிற்று; ஏனென்றால் அது கன்மலையின்மேல் அஸ்திபாரம் போடப்பட்டிருந்தது. என் வார்த்தைகளைக் கேட்டும் அவைகளின்படி செய்யாதவனோ அஸ்திபாரமில்லாமல் மண்ணின்மேல் வீடுகட்டினவனுக்கு ஒப்பாயிருக்கிறான்; நீரோட்டம் அதின்மேல் மோதினவுடனே அது விழுந்தது; விழுந்து முழுவதும் அழிந்தது என்றார்" (லூக்.6:46-49). இன்றைக்கு அநேகர் கர்த்தரை நோக்கி ஆண்டவரே! ஆண்டவரே! என்று சொல்லியும் அவர் சொல்லுகிறபடி செய்யாமல் மண்ணின்மேல் தங்களுடைய அஸ்திபாரத்தை போட்டு அழிக்கப்படுகிறார்கள். தேவன் தம்முடைய சாயலில் மனுஷனை சிருஷ்டித்தார். அவர்களை ஆணும் பெண்ணுமாக சிருஷ்டித்தார் என காண்கிறோம். இப்படி உண்டாக்கப்பட்ட நாம் உண்டாக்கினவரின் சத்தம் கேட்டு அதற்கு கீழ்ப்படியவேண்டியது எவ்வளவு அவசியம். குடும்பத்தில் உள்ள அனைவருக்குமே அநேக உபதேசங்கள் வேதாகமத்தில் கொடுக்கப்பட்டுள்ளது. குறிப்பாக சில காரியங்களை நாம் தியானிக்கலாம். குடும்பத்தில் மெய்யைப் பேச முதலாவது கற்றுக்கொள்ளவேண்டும். இதற்கு மிஞ்சினது தீமையினால் உண்டாயிருக்கும்.

பவுல் சொல்லுகிறார்; "இயேசுவினிடத்திலுள்ள சத்தியத்தின்படியே, நீங்கள் அவரிடத்தில் கேட்டறிந்து, அவரால் போதிக்கப்பட்டீர்களே. அந்தப்படி, முந்தின நடக்கைக்குரிய மோசம்போக்கும் இச்சைகளாலே கெட்டுப்போகிற பழைய மனுஷனை நீங்கள் களைந்துபோட்டு, உங்கள் உள்ளத்திலே புதிதான ஆவியுள்ளவர்களாகி, மெய்யான நீதியிலும் பரிசுத்தத்திலும் தேவனுடைய சாயலாகச் சிருஷ்டிக்கப்பட்ட புதிய மனுஷனைத் தரித்துக்கொள்ளுங்கள். அன்றியும், நாம் ஒருவருக்கொருவர் அவயவங்களாயிருக்கிறபடியால், பொய்யைக் களைந்து அவனவன் பிறனுடனே மெய்யைப் பேசக்கடவன். நீங்கள் கோபங்கொண்டாலும் பாவஞ்செய்யாதிருங்கள், சூரியன் அஸ்தமிக்கிறதற்கு முன்னாக உங்கள் எரிச்சல் தணியக்கடவது; பிசாசுக்கு இடங்கொடாமலும் இருங்கள். திருடுகிறவன் இனித் திருடாமல் குறைச்சலுள்ளவனுக்குக் கொடுக்கத்தக்கதாகத் தனக்கு உண்டாயிருக்கும்படி, தன் கைகளினால் நலமான வேலைசெய்து, பிரயாசப்படக்கடவன். கெட்ட வார்த்தை ஒன்றும் உங்கள் வாயிலிருந்து புறப்படவேண்டாம்; பக்திவிருத்திக்கு ஏதுவான நல்ல வார்த்தை உண்டானால் அதையே கேட்கிறவர்களுக்குப் பிரயோஜனமுண்டாகும்படி பேசுங்கள். அன்றியும், நீங்கள் மீட்கப்படும் நாளுக்கென்று முத்திரையாகப் பெற்ற தேவனுடைய பரிசுத்த ஆவியைத் துக்கப்படுத்தாதிருங்கள். சகலவிதமான கசப்பும், கோபமும், மூர்க்கமும், கூக்குரலும், தூஷணமும், மற்ற எந்தத் துர்க்குணமும் உங்களை விட்டு நீங்கக்கடவது. ஒருவருக்கொருவர் தயவாயும் மனஉருக்கமாயும் இருந்து, கிறிஸ்துவுக்குள் தேவன் உங்களுக்கு மன்னித்ததுபோல, நீங்களும் ஒருவருக்கொருவர் மன்னியுங்கள்" (எபே.4:21-32). இந்தவிதமான சிந்தை உங்களுக்குள் இருக்குமானால் உங்களுடைய குடும்பம் கர்த்தர் சொன்னபடி கன்மலையின்மேல் அஸ்திபாரம் போடப்பட்ட குடும்பமாக இருக்கும். எந்த விதமான சூழ்நிலையிலும், பிசாசுகொண்டுவரும் சகல விதமான தந்திரங்களிலுமிருந்து அப்பொழுது காக்கப்படுவீர்கள். மேற்கண்ட வசனத்தின்படி உங்களுடைய



## வேத அறிவுப்போட்டி 198–ன் விடைகள்

| | |
|---|---|
| 1.உசியா | - 2நாளா.26:20 |
| 2. ஆம் | - கொலோ.2:14 |
| 3. ஆம் | - எஸ்றா 5:14 |
| 4. பவுல் | - 1தெச.2:7 |
| 5. நெகேமியா | - நெகே.13:8 |
| 6. கூடாது | - 1தீமோ.5:1 |
| 7. மொர்தெகாய் | - எஸ்த.2:7 |
| 8. ஜாக்கிரதையாய் | - 2தீமோ.4:2 |
| 9. யோபு | - யோபு 31:1 |
| 10. ஆத்துமா | - எபி.10:39 |

## வேத அறிவுப்போட்டி 199–ன் விடைகள்

1.நீதிமான் - சங்.37:31
2. யாக்கோபு - யாக்.4:15
3. ஜீவன், மரணம் - நீதி.12:28
4. ஜெபம்பண்ணுவதற்கு, பேதுரு - 1பேது.4:7
5. உன் நடையைக், செவிகொடுக்கச் சேர்வதே - பிர.5:1
6. கள்ளப்போதகர்கள் - 2பேது.2:3
7. உத்தம - எசா.56:5
8. இருளிலே - 1யோவா.2:9
9. இல்லை - எரே.14:22
10. நீதிசெய்யட்டும், பரிசுத்தமாகட்டும் - வெளி.22:11

## வேத அறிவுப்போட்டி எண் 198–ல் வெற்றிபெற்றவர்கள்

| | |
|---|---|
| 1.D. அன்புக்கமலம் | - காரைக்குடி |
| 2.B. ஸ்டெல்லாம்மாள் | - கூத்தூர் |
| 3.Mrs. கிறிஸ்டோபல் சாலொமோன் | - கோவை |
| 4.P. சந்திராடேனியல் | - நஞ்சான்குளம் |
| 5.Mrs. ரூத்ஜெயராாணி அன்புராஜ் | - திருநெல்வேலி |
| 6.A. ரெபேக்காள் | - மதுரை |
| 7.Mrs. ஜெனிலாசேகர் | - தென்காசி |
| 8.Mrs. பால்மார்டின் | - சிவகங்கை |
| 9.R. அந்தோனியம்மாள் | - தூத்துக்குடி |
| 10.E. அதிசயம் | - பனைகுடி |
| 11.Mrs. ஜெபாநியூட்டன் | - திருநெல்வேலி |
| 12.A. டேவிட் ஜெயச்சந்திரன் | - மதுரை |
| 13.Mrs. ஃபிரங்களினா ஜான் | - ஊட்டி |
| 14.J. ஆலிவ் | - கோவை |
| 15.J. ஆசாஹெலன் | - ஏம்பல் |
| 16.S. ஜாய் சந்திர காந்தா | - நெல்லூர் |
| 17.Sis. ராஜம்மாள் | - திருப்பூர் |
| 18.B. ஞானதீபம் ஜெயராஜ் | - திருநெல்வேலி |
| 19.Tmt. மரகதம் திரவியம் | - கோம்பை |
| 20.K.S. மாணிக்க வாசகம் | - திருச்சி |
| 21.Mrs. சுசிலா ராஜசிங் | - திருநெல்வேலி |
| 22.Mrs. கிரேஸ் ஸ்டெல்லா பக்தர் | - சென்னை |
| 23.Mrs. சொர்ணமணி தாமஸ் | - தூத்துக்குடி |
| 24.Mrs. ஜாய் மேத்யூ | - விக்கிரமசிங்கபுரம் |
| 25.D. டயானா நேதாஜி | - கூடன்குளம் |
| 26.Mrs. சீலா அலெக்ஸ் | - கன்னியாகுமரி |
| 27.Mrs. தேவபுஸ்பம் | - நாசரேத் |
| 28.J. செல்வராஜ் | - தூத்துக்குடி |
| 29.Mrs. ஜோதிமணி அப்பாதுரை | - ஸ்ரீவில்லிபுத்தூர் |
| 30.R. ஞானசிரோன்மணி | - சமயநல்லூர் |
| 31.S. சைமன் | - திருநெல்வேலி |
| 32.T. ராஜாத்தி | - கோம்பை |

-தொடர்ச்சி7-ம் பக்கம் பார்க்க

## வேத அறிவுப்போட்டி எண் 199–ல் வெற்றிபெற்றவர்கள்

| | |
|---|---|
| 1.P. சந்திராடேனியேல் | - நஞ்சான்குளம் |
| 2.Mrs. சரளாபாய் தானியேல் | - இராமநாதபுரம் |
| 3.R. அந்தோனியம்மாள் | - தூத்துக்குடி |
| 4.Mrs. மேரி ராஜ்மோகன் | - பெரியகுளம் |
| 5.K. ரத்னாபாய் பிரசாத் | - மதுரை |
| 6.Tmt. மரகதம் திரவியம் | - கோம்பை |
| 7.S. சிமியோன் | - திருநெல்வேலி |
| 8.Mrs. ஃபுளோராசுந்தர் | - மதுரை |
| 9.Mrs. ஞானம் பிலிப் | - கோவை |
| 10.Mrs. ஜெபாநியூட்டன் | - திருநெல்வேலி |
| 11.Mrs. மேரி நிர்மலா | - மதுரை |
| 12.N.A. அருள்செல்வராஜ் | - அகஸ்தியார்பட்டி |
| 13.A. டேவிட் ஜெயச்சந்திரன் | - மதுரை |
| 14.Mrs. ஜெபசீலிஜெயக்கொடி | - திருச்சி |
| 15.A. எட்வின் கனகராஜ் | - கன்னியாகுமரி |
| 16.S. ஜாய் சந்திரகாந்தா | - நெல்லை |
| 17.D. அன்புக்கமலம் | - காரைக்குடி |
| 18.B. ஞானதீபம்ராஜ் | - திருநெல்வேலி |
| 19.S. சாந்தகுமாரி | - நாசரேத் |
| 20.J. ரேச்சல் தமிழரசி | - மதுரை |
| 21.R. ஞானசிரோன்மணி | - மதுரை |
| 22.J. ஆலிவ் | - கோவை |
| 23.Mrs. ரூத்ஜெயராணி அன்புராஜ் | - திருநெல்வேலி |
| 24.J. ஜான்பிரபாகர் | - பெரியகுளம் |
| 25.T. ராஜாத்தி | - கோம்பை |
| 26.Miss. சாந்தாதேவி | - தேனி |
| 27.S. லதா சூரியமூர்த்தி | - தேனி |
| 28.Mrs. ஜெபாமோசஸ் | - விலாத்திகுளம் |
| 29.Mrs. ஸ்டெல்லா பக்தர் | - சென்னை |
| 30.E. ஜாய்ஹெலன் புனிதா | - சென்னை |
| 31.Mrs. நவரத்தினம் | - நாசரேத் |
| 32.Mrs. ஜாய்மேத்யூ | - வி.கே.புரம் |
| 33.Mrs. ஜெபக்கனி | - நெல்லை |

-தொடர்ச்சி7-ம் பக்கம் பார்க்க

வேதனைக்குள்ளாக்கிக் கொள்ளவில்லை. தன் எஜமானியின் கீழ் அவள் எவ்வாறு இருந்தாள் என்பது நமக்குத் தெரியாது, ஆனால் அவளோ தன் அடிமைத்தனத்தையும் எண்ணாது கர்த்தருடைய வல்லமையைப் பிரசித்தப்படுத்துகிறாள். சகோதரிகளே, நீங்கள் உங்களுடைய சிறுமையை எண்ணி வருந்தாமல் கர்த்தரை நினைத்து மகிமைப்படுத்துங்கள். கர்த்தராகிய இயேசு தம்முடைய சிலுவையின் மரணபரியந்தம் தம்மைத்தாமே தாழ்த்தினார் (பிலி.2:8), அவர் அசட்டை பண்ணப்பட்டவரும், மனுஷரால் புறக்கணிக்கப்பட்டவருமாயிருந்தார், அவர் எண்ணப்படாமற்போனார் (ஏசா.53:3). ஆனால் தேவன் அவரை உயர்த்தினார். அவரால் இவ்வுலகிற்கு இரட்சிப்பு வந்தது.

நீங்கள் வசிக்குமிடத்தில், வேலை ஸ்தலத்தில், ஆயிரம் ஜனங்களுக் குள்ளே சிறியவர்களாய் காணப்படலாம். ஆனால் ஆயிரங்களுக்குள்ளே சிறியதாய் காணப்பட்ட பெத்லகேமிலேதான் வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமுடையவர் பிறந்தார். அவராலே உலகத்திற்கு பாவத்திலிருந்து விடுதலையும், சமாதானமும் உண்டாயிருக்கிறது. நீங்கள் உங்களுடைய சிறுமையை எண்ணி சோர்ந்து போகாமல் உங்கள் மூலம் இயேசு கிறிஸ்து இவ்வுலகிற்கு அறிவிக்கப்பட உங்களை அவருக்கு அர்ப்பணியுங்கள். அவர் உங்களை உயர்த்துவார். அவர் உங்கள் மூலம் மகிமைப்படுவார்.

**நடப்புச் செய்திகள்**

- **கோடை விடுமுறையில் மாணவர்களுக்கு சிறப்பு வகுப்புகள் நடத்தும் பள்ளிகள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என திண்டுக்கல் மாவட்ட கலெக்டர் பி.ஜி.வினய் எச்சரிக்கை விடுத்துள்ளார்.**
- **விவசாயிகளின் வருமானத்தை மேம்படுத்த**
- **தென்னை மரத்தில் இருந்து நீரா பானம் உற்பத்தி செய்ய தமிழக அரசு அனுமதி அளித்துள்ளது.**
- **ரியோ பாரா ஒலிம்பிக் போட்டியில் தங்கப்பதக்கம் வென்ற தமிழக தடகள வீரர் மாரியப்பனுக்கு பாரா ஸ்போர்ட்ஸ் சங்கம் சார்பில் சென்னையில் பாராட்டு விழா நடந்தது.**

**பொது அறிவுச் சோதனை**

1. திராட்சையில் இருக்கும் சர்க்கரை எது?
   அ) குளுக்கோஸ் ஆ) சுக்ரோஸ் இ) மால்டோஸ்
2. உருவ வழிபாடு யாருடைய காலத்தில் ஆரம்பிக்கப்பட்டது?
   அ) குப்தர்கள் காலம் ஆ) வேதகாலம் இ) இதிகாச காலம்
3. செங்கல்லை தண்ணீரில் போடும் போது நீர்க்குமிழ் தெரிவதன் காரணம் என்ன?
   அ) தண்ணீரில் உள்ள காற்று ஆ) செங்கல்லினால் வெளியேற்றப்பட்ட நீர் இ) செங்கல்லில் உள்ள காற்று
4. சிம்லா ஒப்பந்தம் இந்தியாவுக்கும், பாகிஸ்தானுக்கும் இடையே எந்த வருடம் கையெழுத்தானது?
   அ) 1966 ஆ) 1974 இ) 1972
5. ரோவாஸ் கோப்பை எந்த விளையாட்டுடன் தொடர்புடையது? அ) ஹாக்கி ஆ) பாட்மின்டன் இ) கால்பந்தாட்டம்

**விடைகள்: விடைகள்:**

1. மால்டோஸ் 2. இதிகாச காலம் 3. செங்கல்லில் உள்ள காற்று 4. 1972 5. கால்பந்தாட்டம்



வாழ்க்கையை அமைத்துக்கொள்ளுங்கள். பவுலுடைய மேலான இந்த ஆலோசனைக்கு ஒவ்வொரு நாளும் கீழ்ப்படிந்து நம்முடைய நினைவுகளையும், சிந்தனைகளையும் எடுத்துப்போட்டு வசனத்தை உங்களுடைய இருதயமாகிய பலகைகளில் எழுதிக்கொள்ளுங்கள். அப்பொழுது எல்லாபுத்திக்கும் மேலான தேவ சமாதானம் உங்களை முற்றிலுமாக ஆட்கொள்ளும். அதில் குறிப்பாக; நீங்கள் கோபங்கொண்டாலும் பாவஞ்செய்யாதிருங்கள் என்ற வாசகத்தை சற்று உற்றுனோக்கிப்பாருங்கள். பாவம் தேவனுக்கும் நமக்கும் பிரிவினையை ஏற்படுத்துகிறது. ஆகையால் இங்கு பவுல் குறிப்பிடும்போது கோபங்கொண்டாலும் பாவம் செய்யாதிருங்கள் என்கிறார். எப்படியாவது நம்மை பாவத்திற்கு அடிமையாக்கவேண்டும் என்பதுவே பிசாசினுடைய என்னமாயிருக்கிறது. இவைகளை நாம் முறியடிக்க பாவத்திற்கு விலகியிருக்க வேண்டும். ஆகையால் அடுத்த வசனத்தில் பிசாசுக்கு இடங்கொடாதிருங்கள் என்கிறார். நாம் இடங்கொடாமல் பாவம் நமக்குள்ளே வர வழி இல்லை. நாம் இடங்கொடுக்கிறபடியாலே பிசாசு அதன் வழியாக உள்ளே வருகிறான். யூதாசுக்குள்ளாக பண ஆசை இருந்தபடியாலே அவனுக்குள் பிசாசு உட்புகுந்தான் என ஆவியானவர் மிகத்தெளிவாக குறிப்பிடுகிறார். ஆகையால் உங்களில் ஒருவனாகிலும் வேசிக்கள்ளனாயிராதபடி எச்சரிக்கையாயிருங்கள். அப்படிப்பட்டவர்கள் தங்களுக்குத்தாங்களே ஆக்கினையை வருவித்துக் கொள்ளுகிறார்கள்.

நம்முடைய கைகளினாலே நலமான வேலைகளை செய்யக் கற்றுக்கொள்ளவேண்டும். வேலைசெய்ய மனதில்லாதிருக்கிறவன் அவன் சாப்பிடவுங்கூடாது என திருமறை நமக்குப்போதிக்கிறது. ஆகையால் பவுல் சொல்லும்போது; திருடுகிறவன் இனித் திருடாமல், குறைச்சலுள்ளவனுக்குக் கொடுக்கத்தக்கதாக தனக்கு உண்டாயிருக்கும்படி, தன் கைகளினால் நலமான வேலை செய்து, பிராயாசப்படக்கடவன் என்கிறார். நீங்கள் நலமான வேலைசெய்ய பிரயாசப்படும்போது; அந்த வேலையையும் உங்களுடைய கைகளின் பிரயாசத்தையும் கர்த்தர் ஆசீர்வதிப்பதற்கு சித்தமுள்ளவராயிருக்கிறார். ஈசாக்கை கர்த்தர் ஆசீர்வதித்ததினால் அந்த வருஷத்தில் அவன் நூறுமடங்கு ஆசீர்வாதத்தைப் பெற்றான். நீங்களும் கர்த்தரால் ஆசீர்வதிக்கப்பட நலமான வேலைசெய்யுங்கள். கெட்ட வார்த்தை ஒன்றும் உங்கள் வாயிலிருந்து புறப்படவேண்டாம்; பக்திவிருத்திக்கு ஏதுவான நல்ல வார்த்தை உண்டானால் அதையே கேட்கிறவர்களுக்குப் பிரயோஜமுண்டாகும்படி பேசுங்கள் என்கிறார் அப்போஸ்தலனாகிய பவுல். உங்களுடைய பேச்சை வைத்துத்தான் உங்களுடைய காரியங்களை மற்றவர்கள் நிர்ணயிக்க முடியும். ஆகையால் வாய் சுத்தம் கை சுத்தம் தேவை என்பார்கள். நீங்கள் ஒரு கிறிஸ்தவராக சாட்சியுள்ளவராக வாழவிரும்பினால் உங்கள் வாயின் வார்த்தைகளைக்குறித்து மிகவும் கவனமாயிருக்கவேண்டும்.

மேலும், ஆவியானவரைக்குறித்து நாம் படிக்கும்போது; இன்று பரிசுத்த ஆவியானவரைப்பற்றி பலவிதமான போதனைகள் இருக்கிறது. ஆனால் வேதாகமம் மிகத்தெளிவாக ஆவியானவரைப்பற்றி பேசுகிறது. அன்றியும், நீங்கள் மீட்கப்படும் நாளுக்கென்று முத்திரையாகப் பெற்ற தேவனுடைய பரிசுத்த ஆவி என போதிக்கிறது. ஒவ்வொருவரும் விசுவாசிக்கும்போது பரிசுத்த ஆவியானவரால் அவருக்குள் முத்திரையிடப்படுகிறோம். அன்று முதலே நமக்குள்ளாக ஆவியானவர்

வாசம் பண்ணி நம்மை சகல சத்தியத்திற்குள்ளும் நடத்துகிறார். அவருடைய வசனங்கள் ஆவியாயும் ஜீவனாயும் இருக்கிறது. ஆக, நாம் மீட்கப்படும் நாளுக்கு பரிசுத்த ஆவியானவர் முத்திரையாக இருக்கிறார். ஒரு கடிதம் அனுப்புகிறோம். அக்கடிதம் முத்திரையிடப்படுகிறது. அப்படியானால் அக்கடிதம் ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு அதுவே அத்தாட்சியாக இருக்கிறது. நாமும் மீட்கப்படுவோம் என்பதற்கு பரிசுத்த ஆவியானவர் முத்திரையாக கொடுக்கப்பட்டு இருக்கிறார். ஆகையால் அவர் துக்கப்படும் அளவிற்கு நாம் நடந்துகொள்ளக்கூடாது என பவுல் இங்கு நமக்கு உணர்த்துகிறார். நீங்கள் உங்களுடையவர்கள் அல்ல என்பதை அறிவீர்களா? நாம் கிறிஸ்துவினுடையவர்கள். கிறிஸ்து நம்மை தமது இரத்தத்தை சிந்தி விலைக்கு வாங்கியிருக்கிறார். ஆகையால் நாம் பாவத்துக்கு அடிமைகள் அல்ல. கிறிஸ்துவுக்கு அடிமைகளாக இருக்கிறோம். நம்முடைய சரீரம் கிறிஸ்துவின் சரீரமாக தேவனுடைய ஆலயமாக இருக்கிறது. எனவே பாவத்திற்கு இடங்கொடாதிருக்கவேண்டும். கிறிஸ்துவானவர் நம்மில் வாசஞ்செய்கிறார். பரிசுத்த ஆவியானவர் வசனத்தின் மூலமாக நம்மோடு பேசுகிறார். இதற்கு ஏற்ற வகையில் நம்முடைய ஜீவிமானது காணப்படவேண்டும். அவரை நாம் துக்கப்படுத்தும்போது ஆவியானவர் நம்மைவிட்டு கடந்துசெல்வார். சவுல் கொள்ளையின் மீது கவனம் செலுத்தும்போது ஆவியானவர் அவனைவிட்டு போனார் என காண்கிறோம். ஆகையால், சகலவிதமான கசப்பும், கோபமும் மூர்க்கமும், கூக்குரலும், தூஷணமும், மற்ற எந்தத் துர்குணமும் உங்களைவிட்டு நீங்கக்கடவது என்கிறார் பவுல். நீங்கள் உங்களுடைய வாழ்க்கையில் இவைகளை நீக்கிவிட்டீர்களா? அநேகர் நான் இவைகளை என்னைவிட்டு அகற்றிப்போடும்படியாக முயற்சிக்கிறேன் ஆனால் முடியவில்லை என்பார்கள். ஒரு வீடு தனக்குத்தானே விரோதமாக பிரிந்திருந்தால் அந்த வீடு நிலைநிற்காது. ஆகையால் நம்முடைய சரீரம் நமக்கு விரோதமாக செயல்பட நாம் அனுமதித்தால் அது நம்முடைய கட்டுப்பாட்டில் இருக்காது. எனவே அவைகளை கிறிஸ்துவின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரும்படியாக அவருடைய வசனங்களுக்கு செவிகொடுத்து நம்மில் எழும்புகிற காரியங்களை சிலுவையினால் ஜெயிக்க முற்படவேண்டும். இச்செய்தியில் நாம் தியானித்தபடி கர்த்தர் உங்களுடைய வீட்டைக் கட்ட இடம்கொடுங்கள். உங்களுடைய குடும்பங்களில் சத்தியம் நிலைக்க சத்தியத்திற்கு செவிகொடுத்து, பிசாசுக்கும் அவனுடைய தந்திரமான காரியங்களுக்கும் இடங்கொடாதிருங்கள்.

**நாம் மன்னிக்கும்போது மகத்தான வெற்றியை நாம் பெறமுடியுமா?**

ஆம், இந்த விதமான சிந்தை இருக்கும்போது மகத்தான வெற்றியை நாம் பெறலாம். பவுல் எபேசிய கிறிஸ்தவர்களுக்கு எழுதின கடிதத்தில் நான்காம் அதிகாரம் கடைசி வசனத்தில் இவ்விதமாக குறிப்பிட்டிருக்கிறார். "ஒருவருக்கொருவர் தயவாயும் மனஉருக்கமாயும் இருந்து, கிறிஸ்துவுக்குள் தேவன் உங்களுக்கு மன்னித்ததுபோல, நீங்களும் ஒருவருக்கொருவர் மன்னியுங்கள்" எபேசியர் 4:32 என்கிறார். இந்த விதமான மன்னிக்கும் சிந்தை வந்துவிட்டால் குடும்பங்களில் பிரச்சனை இருக்காது. நாம் எப்படி அவளை மன்னிக்க முடியும் அவள் செய்த காரியம் என்னவென்று தெரியுமா? நான் மன்னித்தாலும் அந்த கடவுளே அவளை மன்னிக்கமாட்டார் என்று சொல்லி இப்படிப்பட்ட வார்த்தைகளினாலே அநேகர் அடுக்கிக்கொண்டே போவார்கள். இதற்கு முடிவுஇல்லை. ஆனால் அதனுடைய முடிவு இருவரும் பிரிந்துபோவார்கள். ஒருவருக்கொருவர் மன்னிக்கும் சிந்தை



கழுவி சுத்திகரிக்கும்படி இயேசு பிறந்தார். அன்பு சகோதரியே, இயேசு கிடத்தப்பட்டிருந்த அந்த முன்னணையைக் குறித்து எப்போதாவது சிந்தித்தது உண்டா? இயேசுவின் பிறப்பாகிய இந் நற்செய்தியை அறிவிக்க ஒருவேளை நீங்கள் அழகிய நறுமணம் வீசும் நாகரீகமான இடத்தையே நாடிச் செல்லுகிறீர்களா, அல்லது அப்பேர்பட்ட இடத்தில் ஊழியஞ்செய்யும் உங்கள் சகோதரிகளைக் குறித்து சிறியவராய் எண்ணுகிறீர்களா? இதை வாசிக்கிற அன்பு சகோதரியே, நீங்கள் அழிந்து போகக்கூடிய இவ்வுலகில் நாகரிகத்தின் உச்சியில் இருந்தால், "இந்தச் சிறியரில் ஒருவனையும் அற்பமாய் எண்ணாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்; அவர்களுக்குரிய தேவதூதர்கள் பரலோகத்திலே என் பரமபிதாவின் சமூகத்தை எப்போதும் தரிசிக்கிறார்கள் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்" (மத்.18:10) என்று கூறும் இயேசுவின் சத்தத்திற்குக் செவிசாயுங்கள் அல்லது சிறுமையாக, எல்லோராலும் ஏளனமாக நடத்தப்பட்டு வேதனையோடே நாட்களைக் கழிப்பீர்களானால், இதோ வேதம் கூறுகிறது, "அவர் சிறியவனைப் புழுதியிலிருந்து எடுத்து, எளியவனைக் குப்பையிலிருந்து உயர்த்துகிறார்; அவர்களைப் பிரபுக்களோடே உட்காரவும், மகிமையுள்ள சிங்காசனத்தைச் சுதந்தரிக்கவும் பண்ணுகிறார்.." (1சாமு.2:8) என்ற வேதவாக்கியம் உங்களைத் தேற்றக்கூடியதாய் இருக்கிறது.


அன்றைய நாளில் அன்னாள் என்ற ஒரு ஸ்திரீ வாழ்ந்து வந்தாள். "கர்த்தர் அவளுடைய கர்ப்பத்தை அடைத்தபடியினால், அவளுடைய சக்களத்தி அவள் துக்கப்படும்படியாக அவளை மிகவும் விசனப்படுத்துவாள்" (1சாமு.1:6) அவள் மனங்கசந்து, மிகவும் அழுது, கர்த்தருடைய சந்நிதியில் தன் இருதயத்தை ஊற்றி ஜெபித்தாள். கர்த்தர் அவளுடைய விண்ணப்பத்திற்கு செவிசாய்த்து அவள் ஒரு குமாரனைப் பெற்றெடுக்க அநுக்கிரகம் பண்ணினார். அவன்தான் கர்த்தருடைய பெரிய வேலையைச் செய்த சாமுவேல் தீர்க்கதரிசி! அன்பு சகோதரியே, நீங்கள் ஏதோ ஒரு சூழ்நிலையில் சிறியவராகவும், ஏளனமாகவும் நடத்தப்பட்டு மிகவும் விசனப்பட்டுக் கொண்டிருக்கலாம்? அற்பமாக கருதப்படுகிற உங்களை தேவன் நேசிக்கிறார். பலவீனமாயிருக்கிற உங்களை பலமுள்ளவராகிய தேவன் நேசிக்கிறார். பலமுள்ளவைகளை வெட்கப்படுத்தும்படி பலவீனமான உங்களைத் தெரிந்துகொண்டார். ஞானிகளை வெட்கப்படுத்தும்படி ஞானத்தில் குறைவுள்ளவர்களான பைத்தியமானவர்களைப்போல் கருதப்படும் உங்களைத் தேவன் தெரிந்து கொண்டார். "உள்ளவைகளை அவமாக்கும்படி, உலகத்தின் இழிவானவைகளையும், அற்பமாய் எண்ணப்பட்டவைகளையும், இல்லாதவைகளையும், தேவன் தெரிந்துகொண்டார்" (1கொரி.1:28) என வாசிக்கிறோம். கர்த்தருக்குள்ளான சகோதரிகளே, கர்த்தரை மகிமைப்படுத்துங்கள், கர்த்தரை அறிவியுங்கள்.

சீரியா தேசத்திற்கு ஒரு இஸ்ரவேல் பெண் அடிமையாகக் கொண்டு போகப்பட்டாள். அங்கு நாகமான் என்ற படைத்தலைவன் வீட்டில் வேலைக்காரியாக பணிவிடை செய்து கொண்டுவந்தாள். அந்த வேலைக்காரியின் மூலம் அந்நாட்டிற்கே இரட்சிப்பு வந்தது. இச்சம்பவத்தினை 2இராஜாக்கள் 5-ம் அதிகாரத்தில் வாசிக்கிறோம். இஸ்ரவேல்தேசத்திலிருந்து சிறைக் கைதியாக பிடித்துக் கொண்டு போகப்பட்ட இந்த சிறுபெண் தன் அடிமைத்தனத்தையோ, சிறையிருப்பையோ எண்ணி தன்னைதானே

# நீ சிறியதாயிருந்தாலும்...

## Though You be Little...

*-J.Glory Arjunan*




இயேசு கிறிஸ்து பெத்லகேம் என்னும் ஒரு சிறிய ஊரில் பிறந்தாரென நாம் அனைவரும் அறிவோம். அந்த பெத்லகேமைப் பார்த்து தான் இந்தத் தீர்க்கதரிசனம் உரைக்கப்பட்டது, ‘‘எப்பிராத்தா என்னப்பட்ட பெத்லகேமே, நீ யூதேயாவிலுள்ள ஆயிரங்களுக்குள்ளே சிறிதாயிருந்தும், இஸ்ரவேலை ஆளப்போகிறவர் உன்னிடத்திலிருந்து புறப்பட்டு என்னிடத்தில் வருவார்; அவருடைய புறப்படுதல் அநாதிநாட்களாகிய பூர்வத்தினுடையது’’ (மீகா.5:2). மேலும் மத்தேயு2:6-லும் கூட, ‘‘யூதேயா தேசத்திலுள்ள பெத்லகேமே, யூதாவின் பிரபுக்களில் நீ சிறியதல்ல; என் ஜனமாகிய இஸ்ரவேலை ஆளும் பிரபு உன்னிடத்திலிருந்து புறப்படுவார் என்று, தீர்க்கதரிசியினால் எழுதப்பட்டிருக்கிறது’’ என்று வாசிக்கிறோம். அன்பு சகோதரிகளே, இவ்வசனத்திலிருந்து நாம் ஒரு பாடத்தைக் கற்றுக்கொள்ளப்போகிறோம்.

யூதேயாவிலுள்ள ஆயிரம் பட்டணங்களுக்குள்ளே சிறியதாக எண்ணப்பட்டிருந்த பெத்லகேம் என்னப்பட்ட ஊரில் தான் உலகத்தையே இரட்சிக்கவந்தவரும், தன்னைத் தான் தாழ்த்துகிறவர்களை உயர்த்த வந்தருமான இயேசு கிறிஸ்து மானிடராய் பிறந்தார். இஸ்ரவேலை ஆளுகிறவராய் புறப்பட்டு இன்று வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரம் படைத்தவராய் உலகத்தையே ஆளுகிறவராய் இருக்கிறார். மிகவும் சிறியதாக எண்ணப்பட்ட அந்த இடத்தில் இயேசு பிறந்தார். இந்த பிறப்பு அநாதிநாட்களாகிய பூர்வத்தினுடையது. அன்பு சகோதரியே நீங்கள் சிறியவராகவும், எல்லாராலும் ஏளனமாகவும் எண்ணப்பட்டுக் கொண்டிருக்கலாம், ஆனால் இயேசு உங்களிலே பிறக்கும்படிக்கு இயேசுவுக்கு நீங்கள் வேண்டும் தங்களை அழகுள்ளவர்கள் என்றும், பட்டதாரிகள் என்றும் பட்டணவாசிகள் என்றும் செல்வந்தர் என்றும், சகல ஆசீர்வாதங்களையும் கொண்டிருப்பவர் என்றும், அழகாய் ஜெபிப்பவர், நேர்த்தியாய் தேவவார்த்தைகளை வியாக்கியானம் செய்பவர் அனைத்தும் அறிந்தவர், சிறந்த பேச்சாளர், சாதுரியவான், ஞானி என்றெல்லாம் நினைத்து உங்களை சிறியவர் என்று எண்ணி எள்ளி நகையாடிக்கொண்டிருக்கிற ஆயிரம் ஜனங்கள் மத்தியிலே தேவன் உங்களை நேசிக்கிறார். ஆனபடியினாலே, ‘‘தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார்’’ (யோவா.3:16). தேவன் கொண்ட அன்பினிமித்தமாகவே தம்முடைய ஒரே பேறான குமாரன் இயேசு உலக இரட்சகராக பிறந்து, முன்னணையிலே (Manger) அதாவது கால்நடைகள் தங்கும் இடத்தில் தாழ்மை கோலம் பூண்டவராய் கிடத்தப்பட்டிருந்தார். கால்நடைகள் தங்குமிடம் அதனுடைய கழிவுகளினால் துர்நாற்றமுடையதாக இருந்திருக்கும். பாவங்களின் மிகுதியால் ஆவி, ஆத்துமா, சரீரம் போன்றவற்றில் அசுத்தமாக அருவருப்பாக துர்நாற்றம் வீசும் ஜீவியத்திலிருந்து நம்மை விடுவித்து பாவமற



இருக்கும்போது. அங்கே சமாதானம் உண்டாகும். ஆகையால் கிறிஸ்துவுக்குள் தேவன் உங்களுக்கு மன்னித்ததுபோல என குறிப்பிடுகிறார். நம்முடைய பாவத்தை நாம் அறிவோம். அவ்வளவு மோசமான நம்முடைய பாவத்தை தேவன் கிறிஸ்துஇயேசுவுக்குள் மன்னித்திருக்கும்போது, நாம் மட்டும் மற்றவர்கள் குறிப்பாக குடும்பத்தில் உள்ளவர்கள் செய்த தவறை மன்னிக்காமல் இருப்போமானால் அது எவ்வளவு பெரிய விபரீதத்தை ஏற்படுத்தும் என்பதை எண்ணிப்பாருங்கள். நீங்கள் மற்றவர்களை மன்னிக்கும்போது மகத்தான வெற்றியை பெற்றுக்கொள்வீர்கள். உங்களுக்காக நாங்கள் ஜெபிக்கிறோம்.

### வேத அறிவுப்போட்டி எண் 198-ல் வெற்றிபெற்றவர்கள்

33.Mrs. ருக்மணிஜெயசீலன் - பன்னைப்புரம்
34.K. இரத்னாபாய் - மதுரை
35.Tmt. சரளாபாய் தானியேல் - இராமநாதபுரம்
36.R. ஜெபக்கனி மார்க்கஸ் - கூமாபட்டி
37.A. ஆலிஸ்குணசீலி - தூத்துக்குடி
38.S. பிரமிளா ரேவதி - ஆஸ்திரேலியா
39.R. கிரேஸ்சங்கீதா - தூத்துக்குடி
40.K. மோகன் - குமாரபாளையம்
41.Mrs. ஃபுளோராளழில் - ஆம்பூர்
42.Mrs. ஜெபசீலிஜெயக்கொடி - திருச்சி
43.K. ராணி - தூத்துக்குடி
44.A. ஜெபக்கனி - சங்கரன்கோயில்
45.A. சாமுவேல் - நாமக்கல்
46.S. தங்கம் - கன்னியாகுமரி
47.S. சாந்தகுமாரி - நாசரேத்
48.E. ஜாய்ஸ்ஹெலன் புனிதா - சென்னை
49.Mrs. சாந்தா பழநி - தருமபுரி
50.R. கஸ்தூரி - தூத்துக்குடி
51.K. ஜாய்சந்திரா - தூத்துக்குடி
52.Mrs. இந்திராஜெபக்கனி - தூத்துக்குடி
53.M. இராமச்சந்திரன் - ஒட்டநத்தம்
54.J. ஜாய் கமலம் - நாசரேத்
55.Mrs. ஃபுளோரா சுந்தர் - மதுரை
56.Mrs. ஜெயமணி ராஜம்மாள் - கடலூர்
57.Mrs. அல்லிராணி காட்வின் - சென்னை
58.R. பாரதி - ஈரோடு
59.R. அனிதாநெகேமியா - ரெட்டியார்பட்டி
60.Mrs. கெத்சிசெல்வின் - சென்னை
61.S.R. பெரியசாமி - செல்லூர்
62.Mrs. தேவதா தேவபிரியம் - சென்னை
63.T. ஏஞ்சலின் நேசமலர் - கன்னியாகுமரி
64.Mrs. ரூபவல்யா - தூத்துக்குடி
65.N. ஜெபத்தாய் - தூத்துக்குடி
66.Miss. சாந்தி - வாடிப்பட்டி

---

76.Mrs. இந்திராஜெபக்கனி - நாசரேத்
77.Mrs. ஷீலா அலெக்ஸ் - கன்னியாகுமரி
78.D. ஸ்பர்ஷன் - கோத்தகிரி
79.S. பிரான்ஷிஸ் அசரியா - நெல்லை
80.N. ஜெபத்தாய் - தூத்துக்குடி
81.R. கிரேஸ்சங்கீதா - தூத்துக்குடி

### வேத அறிவுப்போட்டி எண் 199-ல் வெற்றிபெற்றவர்கள்

34.Mrs. பவுல்மார்டின் - சிவகங்கை
35.K. ராணி - தூத்துக்குடி
36.R. ஜெபக்கனி - கூமாபட்டி
37.P.A. ஜெபஸ்டின் - சென்னை
38.Mrs. கிறிஸ்டோபர் - கோவை
39.A.K. ஜெயா - மார்தாண்டம்
40.Sis. பெனிஷ்யா - சேலம்
41.J.S. ஜெயா மேரிதாய் - திண்டுக்கல்
42.Mrs. தேவபுஸ்பம் - தூத்துக்குடி
43.Mrs. ஜெயமணி ராஜம்மாள் - கடலூர்
44.Sis. ஆலிஸ்குணசீலி - தூத்துக்குடி
45.S. அண்ணம்மாள் - தூத்துக்குடி
46.S. ரெஜீனா செல்வராஜ் - நாசரேத்
47.K.S. மாணிக்கவாசகம் - திருச்சி
48.J. செல்வராஜ் - புதியம் புத்தூர்
49.Sis. அல்லிராணி காட்வின் - சென்னை
50.Mrs. ரூபவல்யா - நாசரேத்
51.Mrs. சொர்ணமணிதாமஸ் - தூத்துக்குடி
52.Mrs. கெத்சிசெல்வின் - சென்னை
53.J. ஜான்ஸி - ஆனைமலை
54.Mrs.கமலா தேவபிச்சை - கலுங்குவிளை
55.Mrs. இளவரசி ஜோபிதா சுந்தரராஜன் - கோவை
56.S. தங்கம் - கன்னியாகுமரி
57.Mrs. சுசீலாராஜசிங் - திருநெல்வேலி
58.Mrs. பிரமிளாரேவதி - கோவை
59.A. ஜெயந்தி - நாமக்கல்
60.K. மோகன் - குமாரபாளையம்
61.Mrs. தேவதா தேவப்பிரியம் - சென்னை
62.Mrs. ஃபுளோராளழில் - ஆம்பூர்
63.Miss. சாந்தி - வாடிப்பட்டி
64.Mrs. ஜோதிமணி அப்பாத்துரை- ஸ்ரீவில்லிபுத்தூர்
65.P. சபீதா - சேலம்
66.S.R. பெரியசாமி - சேலூர்
67.R. ராஜேஸ்வரி - கரூர்
68.K. ஜீவாமிர்தம் - பரமத்தி
69.S. சிநேகவர் - பாண்டமங்கலம்
70.Mrs. ரம்யா - சேலம்
72.T. ஏஞ்சலின் நேசமலர் - கன்னியாகுமரி
73.E. அதிசயம் - பனைக்குடி
74.J. விக்டர் - தூத்துக்குடி
75.G. நிர்மலா வின்சென்ட் - திருப்பூர்

இரட்சிக்கப்பட ஏன் சிறந்த நீதியுள்ள வாழ்க்கை மட்டும் போதாதது?

Why Good Moral Living Alone Is Not Enough To save?

*J.C.Choate*



நீங்கள் இதை உணர்ந்தாலும் உணராவிட்டாலும் அதிகமான ஜனங்கள் இரட்சிக்கப்பட தங்களுடைய சுய நற்கிரியையின் அடிப்படையில் முயற்சிக்கின்றபடியினால் அநேகமாக இழந்து போனவர்களாய் இருப்பார்கள். நித்திய ஜீவனை தேடிக் இயேசுவினிடம் வந்த ஒரு வாலிபனுடைய சம்பவம் இதை நமக்கு நினைப்பூட்டுகிறது. நாம் வாசிக்கலாம் "அப்பொழுது ஒருவன் வந்து, அவரை நோக்கி; நல்ல போதகரே நித்திய ஜீவனை அடைவதற்கு நான் எந்த நன்மையைச் செய்ய வேண்டும் என்று கேட்டான். அதற்கு அவர் நீ என்னை நல்லவன் என்று சொல்வானேன்? தேவன் ஒருவர் தவிர நல்லவன் ஒருவனும் இல்லையே; நீ ஜீவனில் பிரவேசிக்க விரும்பினால் கற்பனைகளைக் கைக்கொள் என்றார். அவன் அவரை நோக்கி எவைகளை என்று கேட்டான். அதற்கு இயேசு கொலை செய்யாதிருப்பாயாக; விபசாரஞ்செய்யாதிருப்பாயாக, களவு செய்யாதிருப்பாயாக, பொய்ச்சாட்சி சொல்லாதிருப்பாயாக; உன் தகப்பனையும் உன் தாயையும் கனம் பண்ணுவாயாக; உன்னிடத்தில் நீ அன்பு கூருவதுபோலப் பிறனிடத்திலும் அன்பு கூருவாயாக என்பவைகளையே என்றார். அந்த வாலிபன் அவரை நோக்கி: இவைகளையெல்லாம் என் சிறுவயதுமுதல் கைக்கொண்டிருக்கிறேன்; இன்னும் என்னிடத்தில் குறைவு என்ன என்றான். அதற்கு இயேசு; நீ பூரண சற்குணனாயிருக்க விரும்பினால் போய் உனக்கு உண்டானவைகளை விற்று, தரித்திரருக்குக் கொடு அப்பொழுது பரலோகத்தில் உனக்குப் பொக்கிஷம் உண்டாயிருக்கும்; பின்பு என்னைப் பின்பற்றிவா என்றார். அந்த வாலிபன் மிகுந்த ஆஸ்தியுள்ளவனாயிருந்தபடியால் இந்த வார்த்தையைக் கேட்டபொழுது துக்கமடைந்தவனாய்ப் போய்விட்டான். (மத்.19:16-22).

முந்தைய கால சம்பவம் பழைய ஏற்பாட்டு சட்டத்தின் அடிப்படையில் நடந்தவையாகும். வேறொரு வகையில் அச்சமயம் சட்டம் தொடர்ந்து கட்டுப்படுத்திக்கொண்டிருந்தது ஆனபடியால் இயேசு அந்த பழைய சட்டம் கூறுகிறபடி இந்த மனிதனுக்குப் பதிலளித்தார். அவன் நித்திய ஜீவனை சுதந்தரித்துக்கொள்ள விரும்பினால் அவன் கற்பனைகளைக் கைக்கொள்ள வேண்டுமென பத்துக்கற்பனைகளை அறிந்தவனாக இயேசுவின் விளக்கத்தை கேள்விப்படுகையில் அவன் தன்னுடைய சிறுவயது முதலே அவைகளைக் கைக்கொண்டு வருவதாக பதிலளித்தான். நாம் இதைக் குறித்து சிந்திக்கையில் அந்த கற்பனைகளையெல்லாம் கைக்கொண்டுவருவதினால் அவன் ஒரு சிறந்த நீதியுள்ள மனிதன் அல்லது வேறுவகையில் சிந்திப்போமானால் எந்த வழியிலும் அவன் ஒரு துன்மார்க்கன் அல்லது ஒரு கெட்ட மனிதனல்ல என அறிந்துகொள்ளலாம். இதுவே அவன் பரலோகத்திற்குச் செல்ல போதுமானது என நினைத்தான், எனவே கர்த்தருடைய அனுமதியை மட்டும் பெற்றுக்கொள்ள



ஆவிகளினிடத்திற்கும் (எபி.12:23) இந்த விளக்கங்களில் எவை எந்த பொருளில் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன என்பதை நாம் கருத்தில் கொள்ளாமல் பார்ப்போமாகில் அவைகள் அனைத்தும் உலகத்தின் வழிகளை விட்டு தேவனுக்காக ஜீவிக்கிற இயேசுகிறிஸ்துவினால் இரட்சிக்கப்பட்டு அவருடைய நாமத்தினாலே அழைக்கப்படுகிற ஜனங்களின் கூட்டம்.

இக் கூட்டத்தில் உள்ளவர்கள் ஒவ்வொருவரும் தனித்தனியே "கிறிஸ்துவைப் போன்று" இருக்கவேண்டியதாயிருக்கிறது, அதுவே "கிறிஸ்தவன்" என்ற வார்த்தையின் பொருள் ஆகும். இந்த பெயரானது ஏதோ இலேசாக தரித்துக் கொள்ள வேண்டியதல்ல. இப்படியாக தேவனுடைய மகிமையை பிரதிபலிக்கும் சகல காரியங்களையும் நாம் செய்ய வேண்டியதாயிருக்கிறது. "வார்த்தையினாலாவது கிரியையினாலாவது, நீங்கள் எதைச் செய்தாலும், அதையெல்லாம் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே செய்து, அவர் முன்னிலையாகப் பிதாவாகிய தேவனை ஸ்தோத்தரியுங்கள்" (கொலோ.3:17). ஆயிரத்துக்கும் மேலாக போலியான சபைகள் இன்றைக்கு உலகத்திலே இருக்கின்றன. அவர்கள் அநேகமான நாமங்களைத் தரித்துக்கொண்டு, மாறுபாடான உபதேசங்களை கடைப்பிடிக்கிறவர்களாயிருந்தும், கிறிஸ்துவினுடைய நாமத்தை தரித்துக் கொள்ளாமலேயே, கிறிஸ்துவினுடையவர்கள் என்று உரிமை கொண்டாடுகிறார்கள்.

இந்த பல் வேறு சபைகள் உருவாக்கிய குழப்பத்தின் காரணமாக, கர்த்தருடைய ஜனங்கள் வழக்கமாக, "கிறிஸ்துவின் சபையார்" என்று அழைக்கப்படுகிறார்கள். ஆகையால் அவர்கள் உலகம்முழுவதும் எளிதாக அடையாளம் காணப்படமுடியும். ஆகையால் "தேவனுடைய சபை" "சபை" "கிறிஸ்துவின் சரீரம்" போன்ற பதங்கள், வசனரீதியான விளக்கங்கள் அல்ல என்று அர்த்தம் அல்ல, ஆனால் "கிறிஸ்துவின் சபை" என்ற பெயரானது எளிதாக அடையாளம் கண்டுகொள்ளும் வகையில் முக்கியமான விளக்கமாக பயன்படுத்தப்படுகிறது. எவ்வாறு இருப்பினும் வெறுமனே ஒரு வேதாகம நாமத்தை தரித்துக்கொள்வது என்பது ஒரு கூட்டத்திற்கு கர்த்தருடைய சபை என்ற அங்கீகாரத்தை அளிக்கிறதில்லை; உபதேசமும், புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவத்தின் நடைமுறை பழக்க வழக்கங்களுமே அந்த பெயரை சத்தியத்தின்படி தரித்துக் கொள்ள தகுதியுடையதாய் இருக்கிறதா என்பதை தீர்மானிக்கின்றன.

**அடையாளம் கண்டு கொள்வதற்கான கேள்விகள்**

நான்கு எளிமையான கேள்விகளைக் கொண்டு போலியான சபைகளை வெளியரங்கமாக்கி எந்த சபையானது கிறிஸ்துவினால் தொடங்கப்பட்டது என்பதை காண்பிக்க முடியும்.

1. இந்த சபை எப்பொழுது தொடங்கப்பட்டது? கிறிஸ்துவின் சபையானது, இயேசுவானவர் பரத்துக்கு ஏறிச் சென்ற பின்பு, பெந்தெகொஸ்தே நாளிலே ஏறத்தாழ கி.பி. 29-ம் ஆண்டில் தொடங்கப்பட்டது. அப்.2-ம் அதிகாரத்தை வாசிக்கவும். இந்த காலத்திற்கு பின்பு தொடங்கப்பட்ட எந்த ஒரு சபையும் கர்த்தரின் சபையாக இருக்கமுடியாது.

2. இந்த சபையானது எங்கே தொடங்கப்பட்டது? கிறிஸ்துவின் சபையானது தீர்க்கதரிசனத்தின்படியே அதன் நிறைவேற்றமாக எருசலேமில் தொடங்கப்பட்டது. (ஏசா.2;2,3; தானி.2:44; யோவேல் 2:22; அப்.2).

3. யார் இந்த சபையை தொடங்கினார்? கிறிஸ்துவின் சபையானது, அவர்தாமே கட்டுவதாக வாக்குத்தத்தம் செய்த இராஜ்யமாக இருக்கிறது (மத்.16:18). மற்றெல்லா சபைகளும் மனுஷரால் ஸ்தாபிக்கப்பட்டவைகளாயிருக்கிறன.

4. இந்த சபையானது என்ன நாமத்தை தரித்துக் கொண்டிருக்கிறது? கிறிஸ்துவின் சபையானது அவருடைய நாமத்தைத் தரித்திருக்கிறது, அதின் அங்கத்தினர்களும் அவருடைய நாமத்தைமாத்திரமே தரித்துக் கொண்டவர்களாயிருக்கிறார்கள்.

எந்த சபையை குறித்தும் இந்த நான்கு உண்மைகளைக் கொண்டு பரிசோதனை செய்தால், எந்த ஒன்று மெய்யான சபையாயிருக்கிறது என்பதை நாம் அறிந்து கொள்ள முடியும். மற்றெந்த கூட்டமும் வேதாகமரீதியாக இந்த கேள்விகளுக்கு பதிலளிக்க முடியாது.

பெண்கள் பகுதி

## தேவனுடைய திட்டம் வெளிப்பட்டது

### God`s Plan Revealed

*-Betty*

**– சென்ற மாத இதழின் தொடர்ச்சி**




வேதாகமம் மனுஷனுக்கான தேவசெய்தியாக இருக்கிறது. புதிய ஏற்பாட்டை நாம் இன்றைக்கு பின்பற்றவேண்டிய பிரமாணமாக இருக்கக்கடவது என்றும் தேவன் விரும்புகிறார். வேதவாக்கியங்களை வாசிக்கும் பொழுது இந்த ஜீவியத்தில் தேவன் நம்மை குறித்து என்ன கேட்கிறார் என்பதை கற்றுக் கொள்வது நமக்கு கடினமான காரியமாக இருக்க வேண்டாம். அவர் நம்மைக் குறித்தது என்ன வாஞ்சிக்கிறார் என்பதை திட்டவட்டமாகவும், தெளிவாகவும் தேவன் குறிப்பிட்டிருக்கிறார். கீழ்ப்படிதலை குறித்விஷயத்தில் தேவன் எந்தவிதமான சந்தேகத்திற்கும் இடம் கொ டுக்கவில்ல. நாம் நம்முடைய வழிகாட்டுதளுக்காக புதிய ஏற்பாட்டை, வேதாகமத்தை பார்க்கிலும் வேறெந்த புஸ்தகத்தையும் கூர்ந்து கவனிக்க வேண்டிய அவசியம் இல்லை. தேவனுடைய திட்டத்திற்காக அவருடைய புஸ்தகங்களின் பக்கத்தை பார்க்கிலும் வேறெந்த புஸ்தகத்தையும் அதை எழுதியவருக்காக கூர்ந்து நோக்கக்கூடாது. இரட்சிக்கப்படுகிறதற்கான எதிர்பார்ப்புடனே அதற்கான விதிமுறைகளுக்காக நாம் வேறெந்த புஸ்தகத்தையாகிலும் சார்ந்திருப்போமேயாகில், நாம் மனுஷனால் எழுதப்பட்ட ஏதோ ஒரு விதிமுறைக்கான தேவனை விட்டு வழி விலகி செல்கிறோம் என்பதையே அது குறிப்பிடுகிறது. மனுஷன் நம்மை இரட்சிக்க முடியாது.

"காலங்கள் நிறைவேறும்போது விளங்கும் நியமத்தின்படி பரலோகத்திலிருக்கிறவைகளும், பூலோகத்திலிருக்கிறவைகளுமாகிய சகலமும் கிறிஸ்துவுக்குள்ளே கூட்டப்பட வேண்டுமென்று ...." (எபே.1:9).

"இதினிமித்தம் நான் பலோகத்திலும், பூலோகத்திலுமுள்ள முழுக்குடும்பத்துக்கும் நாமகாரணராகிய, நம்முடைய கர்த்தராயிருக்கிற இயேசுகிறிஸ்துவினுடைய பிதாவை நோக்கி முழங்கால்படியிட்டு,;; (எபே.3:14,15). தேவனுடைய குடும்பத்துக்கு தொடர்பாக இந்த வசனக் குறிப்புகளில் குறிப்பிடப்பட்டிருக்கிற மூன்று பிரதானமான உண்மைகளை காண்பதற்கு ஒரு நீண்ட சம்பாஷனை அவசியமில்லாத ஒன்றாக இருக்கிறது.

1. ஒரு குடும்பம் இருக்கிறது 2. அது தேவனுடைய குடும்பம் 3. அது தேவனுடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் அழைக்கப்படுகிறது. நாம் இந்த சத்தியங்களை நினைவு கூருவோமேயாகில் மத உலகத்திலுள்ள அதிகமான குழப்பம் உருகி ஓடிப்போகும்.

**தேவனுடைய குடும்பத்தை அடையாளம் கண்டு கொள்ளுதல்**

தேவனுக்கு ஒரு குடும்பம் இருக்கிறது, அது அவருடைய குமாரனின் நாமத்தால் அழைக்கப்படுகிறது. இந்த கூட்டத்தை அடையாளப்படுத்த தேவனால் பயன்படுத்தப்பட்டிருக்கும் சொற்றொடர்கள் ஆவன:

தேவனுடைய சபை. "கொரிந்துவிலே கிறிஸ்து இயேசுவுக்குள் பரிசுத்த மாக்கப்பட்டவர்களாயும், பரிசுத்தவான்காளாகும்படி அழைக்கப்பட்டவர்களாயுமிருக்கிற தேவனுடைய சபைக்கும், எங்களுக்கும் தங்களுக்கும் ஆண்டவராயிருக்கிற நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தை எங்கும் தொழுது கொள்ளுகிற அனைவருக்கும் எழுதுகிறதாவது:" (1கொரி.1:2).

கிறிஸ்துவின் மணவாட்டி. கிறிஸ்து சபைக்குத் தலையாயிருக்கிறது போல, புருஷனும் மனைவிக்குத் தலையாயிருக்கிறான்; அவரே சரீரத்திற்கும் இரட்சகராயிருக்கிறார்" (எபே.5:23). பின்பு கடைசியான ஏழுவாதைகளால் நிறைந்த ஏழு கலசங்களையுடைய அந்த ஏழு தூதரில் ஒருவன் என்னிடத்தில் வந்து நீ இங்கே வா, ஆட்டுக்குட்டியானவருடைய மனைவியாகிய மணவாட்டியை உனக்குக் காண்பிக்கிறேன் என்று சொல்லி" (வெளி.21:9).

முதற்பேறானவருடைய சபை (கிறிஸ்து): பரலோகத்திலே பேரெழுதியிருக்கிற முதற்பேறானவர்களின் சர்வ சங்கமாகிய சபையினிடத்திற்கும், யாவருக்கும் நியாயாதிபதியாகிய தேவனிடத்திற்கும், பூரணராக்கப்பட்ட நீதிமான்களுடைய



விரும்பினான் ஆனால் இச்சம்பவத்தில் இது போதுமானதல்ல இயேசுவோ அவனுடைய உள்ளிந்திரியங்களையும் அவனுடைய ஜீவியத்தையும் கண்டுகொண்டவராக அங்கே ஒரு தடையிருப்பதையும் காண்கிறார். இது அவன் ஒரு பணக்காரன் என்பதைக் காட்டுகிறது. எனவே அவன் தன்னுடைய நம்பிக்கையை தன்னுடைய ஐசுவரியத்தின் மேல் வைத்துக்கொண்டிருந்தான். ஆனபடியினால் இயேசு அவனுக்குள்ள எல்லாவற்றையும் விற்று, தரித்திரருக்குக் கொடுக்க வேண்டுமென அவனிடம் சொன்னார். அதன்பின் நாம் ஒரு துக்ககரமான கூற்றினைப் பெறுகிறோம். வேதவாக்கியம் கூறுகிறது. அவன் மிகுந்த ஆஸ்தியுள்ளவனாயிருந்தபடியால் அதைக் கேட்டபொழுது துக்கமடைந்தவனாய் போய்விட்டான். ஒரு சிறந்த நீதியுள்ள வாழ்வு ஒருவனை இரட்சிக்கப் போதுமானதல்ல.

கொர்நேலியு மற்றும் அவனுடைய வீட்டாரைப்பற்றிய சம்பவத்தில் ஒரு சிறந்த மாதிரியை நாம் பெற்றுள்ளோம். கொர்நேலியு என்பவன் ஒரு புறஜாதியான் அவன் பட்டாளத்திலே ஒரு பொறுப்புள்ள பதவியில் இருந்த ஒரு மனிதன்; அதாவது அவன் நூற்றுக்கதிபதியாக இருந்தான். வேதமும் அவனைப் பற்றி இவ்வாறாகக்கூறுகிறது: அவன் தேவபக்தியுள்ளவனும் தன் வீட்டாரனைவரோடும் தேவனுக்குப் பயந்தவனுமாயிருந்து ஜனங்களுக்கு மிகுந்த தருமங்களைச் செய்து, எப்பொழுதும் தேவனை நோக்கி ஜெபம் பண்ணிக்கொண்டிருந்தான்" (அப்.10:2)., இருந்த போதிலும் அவன் ஒரு இழந்துபோன மனிதனாக இருந்தான். கர்த்தருடைய இடைபடுதல் மூலம் கொர்நேலியுவும் அவனுடைய வீட்டாரனைவரும் மற்றும் பேதுருவும் அவனுடைய சகோதரர்களும் அங்கே கூட்டிச் சேர்க்கப்பட்டார்கள். அந்தத் திருப்புமுனையில் பேதுரு அவர்களுக்குப் பிரசங்கித்தான் மேலும் வேதவாக்கியம் சுவிசேஷம் யூதர்களுக்கு அருளப்பட்டதுபோல புறஜாதியாருக்கும் அருளப்பட்டுள்ளது என்பதை யூதர்கள் நம்பத்தக்கதாக இவர்கள் மேலும் பரிசுத்த ஆவி ஊற்றப்பட்டது என்று கூறுகிறது. "அப்பொழுது பேதுரு நம்மைப்போலப் பரிசுத்த ஆவியைப் பெற்ற இவர்களும் ஞானஸ்நானம் பெறாதபடிக்கு எவனாகிலும் தண்ணீரை விலக்கலாமா என்று சொல்லி, கர்த்தருடைய நாமத்தினாலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுக்கும்படி கட்டளையிட்டான். அப்பொழுது சில நாள் அங்கே தங்கும்படி அவனை வேண்டிக்கொண்டார்கள்" (அப்.10:47,48). இப்போது கொர்நேலியு வாழ்ந்து வந்த விதத்தைக் குறித்து குறிப்பெடுப்பீர்களென்றால் இன்றும் கூட எந்த மனிதனும் அவன் ஒரு தேவபக்தியுள்ள மனிதன், தன் வீட்டாரனைவரோடும் தேவனுக்குப் பயந்தவனுமாயிருந்தவன், ஜனங்களுக்கு மிகுந்த தருமங்களைச் செய்தவன், எப்பொழுதும் தேவனை நோக்கி ஜெபம் பண்ணிக்கொண்டிருந்தவன், பார்வைக்கு இனிமையான நல்ல மனிதன் என பலவாறு வகைப்படுத்தப்பட்டிருப்பான் என்பதை நீங்கள் காணலாம். இருந்தபோதிலும் கொர்நேலியு ஒரு இழந்துபோன மனிதனாக இருந்தான். ஆனபடியினால் சுவிசேஷத்தைக் கேள்விப்படுவதும் அதை விசுவாசிப்பதும் அவன் இரட்சிக்கப்படும்படிக்கு அதற்குக் கீழ்ப்படிவதும் அதன்பின் அவன் கர்த்தருடைய சபையில் சேர்க்கப்படுவதும் அவனுக்கு அவசியமாயிருந்தது.

இதையெல்லாம் செய்வதற்கு அவன் மறுத்தவனாயிருந்தானா? அவன் செய்த எல்லா நற்கிரியைகளை செய்து கொண்டிருந்த போதிலும் அவன் இழந்து போன நிலைமையிலேயே தொடர்ந்திருந்திருப்பான்.

ஒருவன் இரட்சிக்கப்பட்டவனாயிருக்க ஒரு சிறந்த நீதியுள்ள வாழ்வு வாழ வேண்டுமென்பது உண்மைதான். அதன் பொருள் ஒருவன் வெறுமனே கெட்ட மற்றும் தவறான செயல்கள் புரிவதிலிருந்து விலகி இருக்க வேண்டும். இதன் இன்னொரு அர்த்தம் ஒருவன் மாம்சத்தின் கிரியைகளை அல்லது உலகப் பிரகாரமான கிரியைகளைச் செய்யக்கூடாது. கொரிந்து பட்டணத்திலுள்ள கிறிஸ்தவர்களுக்குப் பவுல், ‘‘அநியாயக்காரர் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லையென்று அறிவீர்களா? வஞ்சிக்கப்படாதிருங்கள்; வேசிமார்க்கத்தாரும், விக்கிரகாராதனைக்காரரும், விபசாரக்காரரும், சுயபுணர்ச்சிக்காரரும், ஆண்புணர்ச்சிக்காரரும், திருடரும், பொருளாசைக் காரரும், வெறியரும், உதாசினரும், கொள்ளைக்காரரும் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லை.’’ (1கொரி.6:9,10) என்று எழுதினார். அவர்களுடைய உலகப்பிரகாரமான ஐக்கியத்தைக் குறித்து கொரிந்துவிலுள்ள சகோதரருக்குச் சொல்லுகையில் பவுல் ‘‘விபசாரக்காரரோடே கலந்திருக்கக் கூடாதென்று நிருபத்தில் உங்களுக்கு எழுதினேன் ஆனாலும் இவ்வுலகத்திலுள்ள விபசாரக்காரர் பொருளாசைக்காரர், கொள்ளைக்காரர், விக்கிரகாராதனைக்காரர், இவர்களோடு எவ்வளவும் கலந்திருக்கக்கூடாதென்று நான் எழுதவில்லை; அப்படியானால் நீங்கள் உலகத்தை விட்டு நீங்கிப் போகவேண்டியதாயிருக்குமே. நான் உங்களுக்கு எழுதினதென்னவென்றால் சகோதரனென்னப்பட்ட ஒருவன் விபசாரக்கார னாயாவது, பொருளாசைக்காரனாயாவது, விக்கிரகாராதனைக் காரனாயாவது, உதாசினனாயாவது, வெறியனாயாவது, கொள்ளைக் காரனாயாவது இருந்தால் அவனோடே கலந்திருக்கக்கூடாது, அப்படிப்பட்டவனுடனே கூடப் புசிக்கவுங்கூடாது’’ (1கொரி.5:9-11) என்று சொன்னார். இங்கே பவுல் உலகத்தாரோடே எவ்வளவும் பேசி கலந்திராமல் இவ்வாழ்வினை நடத்திச் செல்வது கூடாதகாரியம் என்கிறார். ஆனால் கிறிஸ்துவுக்குள் ஒரு அவிசுவாசமான சகோதரனுக்குள்ளும் ஒரு துன்மார்க்கமான வாழ்வு வாழ்கின்றவனுக்குள்ளும் இக்காரியங்கள் வரும்பொழுது, அப்பேர்பட்ட நபருடன் நாம் ஐக்கியங்கொள்ளக்கூடாது.

பவுல் தொடர்ந்து கலாத்திய சகோதரர்களுக்கு ‘‘மாம்சத்தின் கிரியைகள் வெளியரங்கமாயிருக்கின்றன; அவையாவன; விபசாரம், வேசித்தனம், அசுத்தம், காமவிகாரம், விக்கிரகாராதனை, பில்லிசூனியம், பகைகள், விரோதங்கள், வைராக்கியங்கள், கோபங்கள் சண்டைகள், பிரிவினைகள் மார்க்கபேதங்கள், பொறாமைகள், கொலைகள், வெறிகள், களியாட்டுகள் முதலானவைகளே; இப்படிப்பட்டவைகளைச் செய்கிறவர்கள் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லையென்று முன்னே நான் சொன்னதுபோல் இப்பொழுதும் உங்களுக்குச் சொல்லுகிறேன்’’ (கலா.5:19-21) என்கிறார். பவுல் பல்வேறு வேத பகுதிகளில் ஒருவன் இவ்வகையான பாவச்செயல்களுக்கு இஷ்டப்படி இடமளித்து



D.முக்கியமில்லாத நபர் என்று ஒருவருமில்லை.
1. தாலந்துகளைப் பற்றிய உவமை திறமைகளிலுள்ள வித்தியாசத்தை விளக்குவதோடு ஒவ்வொருவரிடமும் கொஞ்சம் திறமை இருக்கிறது என்பதையும் விளக்குகிறது.
2. இந்த உலகம் சிலரை அவசியமற்றவர் என்று அகற்றிவிடுகிறது.
3. இயேசுவானவர் சிறு காரியங்களுக்கும் முக்கியத்துவமளித்தார்.
4. ஒரு கலசம் குளிர்ந்த தண்ணீரைப் பற்றிப் பேசுகிறார்.
சிறுபிள்ளைகளுக்கு முக்கியத்துவமளிக்கும்படி அங்கே இருக்கிறார்.
தன்னுடைய பாதங்களை அபிஷேகம் செய்ததை தன்னால் இயன்றதைச் செய்தாள் என்று மரியாளைப் பாராட்டுகிறார்.அந்த விதவை தன் சக்திக்குட்பட்டதைச் செய்தது அவருடைய கவனத்திலிருந்து தப்பவில்லை.
5. தன்னுடைய திறமைகளைப் பயன்படுத்தாத உங்களையும் தேவன் காணாமல் விட்டுவிட மாட்டார்.
யார் சிறப்பான வருத்தமுண்டாக்காத வாரம் ஒரு தொழுகைக்கு வரும் அர்ப்பணிப்பில்லாத கிறிஸ்தவனை, பொல்லாத சோம்பேறியை அங்கத்தினன் என்று யார் சொல்லுவார்? இயேசு சொன்னார்: தங்கள் தாலந்துகளைப் பொறுத்த மட்டில் பலர் பன்றியைத் தின்றுவிட்டு அதன் வாலையே கடவுளுக்குக் கொடுக்கின்றனர்.
நாம் நம்முடைய பணத்தில் பன்றிவாலைக் கொடுக்கும் குற்ற உணர்வு உள்ளவர்களாயிருக்கிறோமா? வெள்ளியும் என்னுடையது பொன்னும் என்னுடையது என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார் (ஆகாய் 2:8). மற்றும் மலைகளில் திரிகிற ஆயிரமாயிரமான கால்நடைகளும் என்னுடையது (சங்.50:10).
விதவையால் முடிந்தது (மாற்.12:41-44).
1. அவர்கள் எல்லாரைக் காட்டிலும் இந்த விதவை அதிகமாகக் கொடுத்தாள்.
2. மற்றவர்கள் செய்யாதபோது இவள் தியாகம் செய்தாள்.
3. நம்மிடம் குறைவாக இருந்தபோதும் கூட நாம் கொடுக்க வேண்டும்.
அந்த விதவை அந்த விதமாகக் கொடுத்ததற்கு மூன்று காரணங்கள்.
1. அவளிடத்தில் பிரிவினையற்ற ஒரே இருதயமிருந்தது.
2.அவள் முற்றிலும் தன்னை தேவனுக்கு அர்ப்பணித்திருந்தாள். ஒரு காசை தனக்கென்று வைத்திருக்கலாம்.
மக்கெதோனியர்கள் தங்களை முதலாவது கிறிஸ்துவுக்கு ஒப்புக்கொடுத்தனர். மேலும் நாங்கள் நினைத்தபடி மாத்திரம் கொடாமல் தேவனுடைய சித்தத்தினாலே முன்பு தங்களைத் தாங்களேயும் பின்பு எங்களுக்கும் ஒப்புக் கொடுத்தார்கள் (2கொரி.8:5).
2. அவளுக்கு சுயநலமற்ற (இருதயமிருக்கிறது) ஆன்மா இருந்தது.
அவள் தனக்கிருந்த எல்லாவற்றையும் கொடுத்துவிட்டாள் என்று கிறிஸ்து சொன்னார்.
அவள் தன்னைப்பற்றி நினைக்கவில்லை
3. அவளிடம் சரணடையும் சித்தமிருந்தது. அவள் அநேக சாக்கு போக்குகளை கண்டுபிடித்திருக்கலாம். அவளுடைய நிலை தேவ சித்தத்தை சரியாக கடைபிடிக்கிறாள் என்பதைக் காட்டுகிறது.

தெரிந்து கொள்வோம்

துணுக்குகள்

K.R.K.Ravi Asir, Associate Editor

- **ஒரு கடமை விருப்பமாக ஆகிவிட்டால் இறுதியில் அதுவே சந்தோஷமாக ஆகிவிடும் – ஜார்ஜ் கிரிட்டன்**
- **வாழ்க்கையில் கஷ்டங்களை பார்க்காதீர்கள், அவற்றுடனே தன்னம்பிக்கையோடு முன்னேறப்பாருங்கள் – இங்ஸ்மேன்**
- **முயற்சி எல்லா வேளைகளிலும் இன்பம் பயப்பதில்லை. ஆனால் முயற்சியின்றி ஒருபோதும் இன்பம் பிறப்பதில்லை – பெஞ்சமின் டிஸ்ரேலி**
- **வெற்றிகரமான வாழ்க்கை என்பது தன்னம்பிக்கையுடன் செயல்படுவது – ராஸ்மேட்**
- **புதுமையாகச் சாதிக்க வேண்டும் என்று கனவு காண்பவர்கள் தான் நமக்குத் தேவை – ஜான். எப். கென்னடி**

பாடம் - 22

## பன்றி - வால் மதம்

## Pig - Tail Religion

*- Jerry Bates*

-சென்ற மாத இதழின் தொடர்ச்சி




4. நெருங்கிய நண்பனாயிருந்தாலொழிய வியாதிப் பட்டவர்களை சென்று பார்ப்பதில்லை.

5. பக்கத்து வீட்டாருக்கு சிலர் போதிக்க முயற்சிப்பதில்லை.

6. சில வேலையில் உதவி செய்ய அழைத்தால், சிலர் சொல்லுவது எனக்கு நேரமில்லை. இந்த விதமான மக்களெல்லாம் பன்றியைத் தின்றுவிட்டு வாலைக் கொடுப்பவர்களல்லவா? நம்முடைய தாலந்துகளில் (மீதியை) பன்றியை தேவனுக்குக் கொடுக்கும் குற்ற உணர்வோடிருக்கிறோமா? குடிமக்கள் தங்கள் திறமைகளை பயன்படுத்த வேண்டும் என்று அரசியல் தலைவர்கள் உணர்கின்றனர்.

1 . இந்த தேசம் பல திட்டங்களைக் கொண்டு மக்களுக்கு உதவி செய்து உற்சாகப்படுத்தி அவர்கள் திறமைகளை வளர்த்துக் கொள்ள பல வாய்ப்புகளைக் கொடுக்கிறது.

2. தாங்கள் அறிவுக் கூர்மையால் வரும் திறமைகளை அலட்சியப்படுத்தும் மாணவர்களைக் குறித்து ஆசிரியர்கள் சிந்தனையுள்ளவர்களாக இருக்கின்றார்கள்.

3. தன்னுடைய மேம்பாட்டுக்காக தன் திறமைகளையோ நேரத்தையோ பயன்படுத்த மனமில்லாதவர்களைக் குறித்து குடும்பத்தவர் மன வேதனைப்படுகிறார்கள்.

4. உலகத்திலேயே மிகப் பெரிய கல்லறை எது என்றால் அது பயன்படுத்தப்படாத தாலந்துளைப் புதைத்த இடம்தான் (யாரென்று தெரியவில்லை).

5. சபையிலே பயன்படுத்தப்படாத மேன்மைக்கு கொண்டு வரப்படாத மனிதவளம் அடங்கிய நிலம் நிறைய உள்ளது. நாம் அனைவரும் ஒரே மாதிரி ஆசீர்வதிக்கப்படவில்லை என்பது தேவனுக்கு தெரியும். ஆனால் இருப்பதைப் பயன்படுத்த வேண்டுமென்று எதிர்பார்க்கிறார்.

நம்முடைய தாலந்துகளை உபயோகிக்க மூன்று முக்கியமான வழிகள்.

1. சுய மதிப்பீடு: ஒருவர் தன்னுடைய பலம் எது எதில் இருக்கிறது என்பதைத் தேடி கண்டு பிடிக்கவேண்டும்.

2. சுய வளர்ச்சி: ஒருவன் தன்னுடைய திறமைகளையும் அக்கறைகளையும் வளர்க்க மிகவும் நிதானத்துடன் கவனமாக முயற்சிக்க வேண்டும்.

3. சுய ஒழுக்கம்: நேரத்தை ஞானமாக பயன்படுத்துவதும் அதில் அடங்கும். நல்ல தாய் தகப்பன்மார்கள் தானாகவோ பிறப்பதில்லை.

4. சுய ஈடுபாடு: தேவனுக்கு சேவை செய்யும்படி தன்னுடைய திறமைகளைப் பயன்படுத்த ஒருவர் விரும்புகிறார் என்பது இதில் அடங்கும்.

தங்கள் தாலந்துகளில் (கடைசி பகுதியையே) பன்றி வாலையே கடவுளுக்குக் கொடுக்கின்றனர்.

1. ஒவ்வொரு சபையிலும் நற்குணமிக்க தொழிலதிபர்கள் அல்லது பெரிய பதவிகளிலிருப்பவர்கள் இருப்பார்கள். இருப்பினும் அவர்கள் தங்களால் எதுவும் செய்ய முடியாது என்பர்.

2. பள்ளிக்கூடம் நடத்துதல், மக்கள் சமுதாயத்தில் பல முயற்சிகளைச் செய்கின்றனர். இருப்பினும் இவைகளை சபையின் வளர்ச்சியில் சேவையில் பயன்படுத்த மறுக்கின்றனர்.

3. சில பள்ளி ஆசிரியர்கள் வேத வகுப்புகள் நடத்த மறுக்கின்றனர்.

4. விற்பனையாளர்கள் தங்கள் நண்பர்களுக்கு சுவிசேஷப் புத்தகங்களை விற்க மறுக்கின்றனர்.

5. பெரும் சமையற்காரர்கள் தேவையுள்ளோர் மற்றும் வியாதியுற்றோருக்கு உதவி செய்ய மறுக்கின்றனர்.



தேவனுடைய ராஜ்யம் அல்லது கர்த்தருடைய சபையில் பிரவேசிக்க முடியாதென கூறுகின்றார். கிறிஸ்தவர்களோ, கிறிஸ்தவர்களல்லாதவரோ ஒருவன் இப்பேர்பட்ட பாவங்களில் ஈடுபட்டுக்கொண்டும் தேவனையும் பிரியப்படுத்த இயலாது. ஒருவன் இப்பேர்பட்ட பாவங்களை செய்கிறதில்லை என்ற அடிப்படையில் மட்டும் இரட்சிக்கப்பட முடியாத வேளையில் ஒருவன் கிறிஸ்தவனாக நிலைத்திருப்பதற்கு அவன் பொல்லாங்காய்த் தோன்றுகிற எல்லாவற்றையும் விட்டு விலகவேண்டுமென்று கிறிஸ்து விரும்புகிறார். (1தெச5:22)

கிறிஸ்தவர்கள் மற்ற சமயத்தினரை விட அதிகமான நீதிக்குரிய சுதந்திரத்திற்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர் என சிலமனிதர்கள் தப்பெண்ணம் கொண்டிருக்கின்றனர். அவர்கள் ஒரு கிறிஸ்தவன் புகைபிடிக்கலாம், மதுபானம் அருந்தலாம், ஒழுக்கங்கெட்ட செயல்களில் ஈடுபடலாம் கெட்டவார்த்தை பேசலாம், ஆபாச உடை அணியலாம் இது போன்ற இன்னும் பலவற்றைச் செய்யலாம் என நினைக்கின்றார்கள். வேதாகமம் என்ன போதிக்கிறது, கிறிஸ்தவர்களாக இருப்பதற்குரிய அர்த்தம் என்ன என்பதை அறிந்தவர்கள் நிச்சயமாக இவ்வாறெல்லாம் செய்யக்கூடாது என அறிவார்கள். கிறிஸ்தவர்கள் என்று சொல்லுகின்ற சிலர் இவ்வாறான செயல்களிலும் தவறான பழக்க வழக்கங்களிலும் ஈடுபடுகிறது உண்டு என்பது உண்மை, ஆனால் அவ்வாறு செய்வதினால் அவர்கள் தேவனை துக்கப்படுத்திவருகின்றனர். ஒருவன் இரட்சிக்கப்படவும் ஒருவன் கிறிஸ்தவனாயிருக்கவும், தேவனிடத்திலும் தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்துவினிடத்திலும் விசுவாசம் கொண்டிருந்தால் மட்டும் போதாது அவன் தன்னுடைய சகல பாவங்களுக்காகவும் கண்டிப்பாக மனந்திரும்பி அல்லது அவைகளை விட்டு விலகி அவன் கிறிஸ்துவை தேவனுடைய குமாரரென்று ஏற்றுக் கொண்டு அல்லது அறிக்கையிட்டு கடைசியாக தன்னுடைய பாவங்கள் போகக் கழுவப்பட ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ள வேண்டும். இதை ஒருவன் செய்யும்போது மட்டுமே கர்த்தர் அவனை இரட்சித்து தம்முடைய சபையில் சேர்த்துக்கொள்ள மனதுள்ளவராய் இருப்பார். கிறிஸ்தவனாகிய ஒருவன் ஜீவகிரீடத்தை பெறுகிறவனாயிருப்பதால் அவன் மரணம்பரியந்தம் கர்த்தருக்கு உண்மையுள்ளவனாயிருக்க வேண்டும். இவையெல்லாவற்றையும் அதிகமதிகமாய் மறுபடியும் வேதவாக்கியங்களில் வாசிக்கிறோம் (மாற்.16:15,16; அப்.2:38; மத்.10:32; அப்.2:47; வெளி.2:10)

இப்போது ஒருவன் தன்னுடைய சிறந்த ஜீவியத்தின் அடிப்படையில் இரட்சிக்கப்பட்டிருக்கிறான் என ஒரு சிறந்த நீதியுள்ள மனிதனாகவும் விசுவாசமிக்கவனாகவும் இருக்கலாம், ஆனால் துன்மார்க்கத்தோடே இருப்பதினால், அவன் இரட்சிக்கப்பட்டவனாயிருக்க அவன் கர்த்தருக்குக் கீழ்ப்படியவேண்டும். அவனுடைய நற்கிரியைகள் மட்டும் அவனை இரட்சிக்காது. ஒருவனுடைய சுய நீதியின் கிரியைகள் அவனை இரட்சிக்காது (எபே.2:8,9; தீத்து3:5). ஒருவன் தன்னை இரட்சித்துக்கொள்ள தன்னுடைய சொந்த நற்கிரியைகளை நம்புகின்றவிஷயத்தில், அவன் அந்த பாவத்திற்காக மனந்திரும்ப வேண்டும். பவுல் நாமெல்லாரும் பாவஞ்செய்திருக்கிறோம் என்கிறார்

(ரோம.3:23). ஆனபடியினால் இழந்து போனதைத் தேடவும் இரட்சிக்கவுமே கர்த்தர் வந்திருக்கிறார் என வாசிக்கிறோம் (லூக்.19:10). இல்லை, மனிதன் ஏற்கனவே இரட்சிக்கப்பட்டுவிட்டபடியினால் கிறிஸ்து மரிக்கவில்லை, ஆனால் மனிதன் இழந்துபோனவனாகவும் இரட்சிக்கப்பட வேண்டியவனாகவுமிருந்தான். பவுல், கிறிஸ்து நம்முடைய பாவங்களுக்காக மரித்தார் என்றார் (1கொரி.15:1-4). பேதுரு, "ஏனெனில், கிறிஸ்துவும் நம்மைத் தேவனிடத்தில் சேர்க்கும்படி அநீதியுள்ளவர்களுக்குப் பதிலாக நீதியுள்ளவராய்ப் பாவங்களினிமித்தம் ஒருதரம் பாடுபட்டார்; அவர் மாம்சத்திலே கொலையுண்டு, ஆவியிலே உயிர்ப்பிக்கப் பட்டார்"(1பேது.3:18) என்றார்.

என்னுடைய நண்பனே, நீங்கள் இரட்சிக்கப்பட்டிருக்கிறீர்களா? அப்படியானால், நீங்கள் எவ்வாறு இரட்சிக்கப்பட்டீர்கள்? நீங்கள் சிறந்த நீதிக்குரிய வாழ்க்கைவாழ்வதின் மூலம் பரலோகத்திற்குச் செல்ல முயற்சிக்கிற ஒருவராக இருக்கின்றீர்களா? உங்களுடைய நம்பிக்கையை உங்கள் மேலும் உலக ஆஸ்தியின் மேலும் யாரோ ஒரு மனிதன் மேலும், மனிதனால் உருவாக்கப்பட்ட அமைப்பின் மேலும், அல்லது இவ்வுலகத்தின் வேறு ஏதோ ஒன்றின் மேலும் வைத்துக்கொண்டிருக்கிறீர்களா? பிறகு உங்களுடைய சொந்த உபாயங்களின் மூலம் பரலோகத்திற்குச் செல்ல முயன்று கொண்டிருக்கிறீர்கள். அப்படியானால் உங்களால் இதைச் செய்யமுடியாது என்பதை உணர்ந்து கொள்ள வேண்டியது அவசியம். கிறிஸ்துவினாலன்றி வேறொருவராலும் இரட்சிக்கமுடியாது. நீங்கள் அவருக்குக் கீழ்ப்படிந்து, மரணபரியந்தம் பரிசுத்தமாக வாழ்ந்து தேவபக்திக்குரிய ஜீவியத்தைச் செய்யும் போது, அவர் உங்களை இரட்சிப்பதாக மாத்திரமல்ல, பரலோகத்தில் உங்களுக்கு ஒரு வீட்டையும் தருவதாக வாக்குப்பண்ணி யிருக்கிறார். அதைப்பற்றியது தான் வேதமும் கிறிஸ்தவமும்.

நீண்ட காலங்களுக்கு முன் தேவனுடைய தீர்க்கதரிசி ஒரு அடிப்படை உண்மைக் கொள்கையை ஏற்படுத்தினான் அதுவே அன்றும் உண்மையானதாயிருந்தது இன்றும் உண்மையுள்ளதாயிருக்கிறது. அவன், "கர்த்தாவே, மனுஷனுடைய வழி அவனாலே ஆகிறதல்லவென்றும், தன் நடைகளை நடத்துவது நடக்கிறவனாலே ஆகிறதல்லவென்றும் அறிவேன்" (ஏரே.10:23) என்றான். அதை ஏற்றுக்கொள்ள தாழ்மை அவசியம், ஆனால் ஞானமுள்ளவன் அதை ஏற்றுக்கொள்கிறான்.

மீண்டும், நீங்கள் யாரானாலும், எவ்விதமான ஜீவியத்தைச் செய்கிறவரானாலும், நல்லவரோ அல்லது கெட்டவரோ, நீங்கள் இரட்சிக்கப்பட வேண்டுமானால் தேவனுக்குக் கீழ்ப்படியும்படி உங்களை துரிதப்படுத்த விரும்புகிறேன். நீங்கள் இரட்சிக்கப்பட்டால் மட்டுமே (மாற்.16:16), கிறிஸ்து உங்களை தம்முடைய சபையில் சேர்த்துக்கொள்வார் (அப்.2:47).




JOIN OUR
WORLD EVANGELISM BIBLE SCHOOL
RIGHT NOW

Contact: 94435 58041




## நமது நண்பர்களுக்கு சுவிசேஷம் அறிவித்தல்
## Evangelizing Our Friends *-TVOTI*



- சென்ற மாத இதழின் தொடர்ச்சி

**தேவனுக்கும் நம்முடைய நண்பர்களுக்கும் இடையே ஒரு பிரச்சனை உள்ளது.**

There is a Problem Between God and our friends - Lesson-2

**மனப்பாட வசனம்:**

**ஏசாயா 59:1-2 "இதோ, இரட்சிக்கக்கூடாதபடிக்குக் கர்த்தருடைய கைகுறுகிப்போகவுமில்லை, கேட்கக் கூடாதபடிக்கு அவருடைய செவி மந்தமாகவுமில்லை. உங்கள் அக்கிரமங்களே உங்களுக்கும் உங்கள் தேவனுக்கும் நடுவாகப் பிரிவினை உண்டாக்குகிறது; உங்கள் பாவங்களே அவர் உங்களுக்குச் செவி கொடாதபடிக்கு அவருடைய முகத்தை உங்களுக்கு மறைக்கிறது"**

**பாடம் - 2**

ஒத்துப்போகாத இரண்டு நண்பர்களை நீங்கள் எப்போதாவது பார்த்திருக்கிறீர்களா? ஒருவேளை அவர்கள் மிகவும் எதிர்மறையான முறையில் ஒத்துப்போகாது இருந்திருக்கலாம், எனவே அதன் பின் அவர்கள் ஒருசில மணித்துளிகள் கூட ஒருவரிடத்தில் ஒருவர் பேசவில்லை அவர்கள் ஒப்புரவானார்களா? ஒருவரோடொருவர் ஒப்புரவு ஆவதற்கு அவர்கள் என்ன செய்தார்கள்? இச்சூழ்நிலைக்கு மேலாக அவர்கள் இதைச் செய்வதற்கு ஒருவரோடொருவர் பேசியிருக்க வேண்டும்.

உங்களைப் பற்றி என்ன? எப்போதாவது நீங்கள் எவரையேனும் வேதனைப்படுத்தியிருக்கிறீர்களா? வேறுயாராவது உங்களை வேதனைப்படுத்தி யிருக்கிறார்களா? நீங்கள் மேற்கொள்ளக்கூடாத பெரிய கொடூரமான முறையில் தீங்கு ஏற்பட்டுள்ளதா? பலாத்காரம் அல்லது கொலை போன்றவற்றைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்? அவைகள் குற்ற நடவடிக்கைகளா? தேவனைப் பற்றி உங்கள் நினைவு எப்படிப்பட்டது? அவர் வேதனைப் படுகிறாரா? அப்படியென்றால் எவை அவரை வேதனைப்படுத்துகிறது?

**ஜெபியுங்கள்**

- 19 வது வாசகர் கருத்தரங்கிற்காக..
- இம்மாதம் பல இடங்களில் நடைபெறும் கூட்டங்களுக்காக...
- மழைக்காக...
- நாட்டிற்காக...
- விடுமுறை காலங்களில் மாணவர்களின் பாதுகாப்பிற்காக...
- புதிய வாசகர்களுக்காக...
- சமாதானத்திற்காக...

**கர்த்தருடைய திராட்சத்தோட்டத்தில் வேலை செய்ய வாலிப சுவிசேஷகர்கள் தேவை. உணவும், உடையும், மற்றும் உறைவிடமும் கொடுக்கப்படும்.**

**இயேசு சொல்கிறார்:**

**"ஒருவன் எனக்கு ஊழியஞ்செய்கிறவனானால் என்னைப் பின்பற்றக்கடவன், நான் எங்கே இருக்கிறேனோ அங்கே என் ஊழியக்காரனும் இருப்பான்; ஒருவன் எனக்கு ஊழியஞ்செய்தால் அவனைப் பிதாவானவர் கனம்பண்ணுவார்"**

**யோவான்12:26.தொடர்புக்கு :94435 58041**